பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 27 வெள்ளிக்கிழமை 11.06.2021 கதிர் 218

### இது ரகசியம் அல்ல!

மீண்டும் அதே முதுமொழியுடன் என் பத்தியை இன்று ஆரம்பிக்க வேண்டிய நிலைமை. சோழியன் குடுமி சும்மா ஆடாது...! – என்பதுதான் அது.

பழைய பஸ் 'பொடி'களை கடலுக்குள் இறக்கும் திட்டம் என்றதும் ஏதோ நெருடியது. பக்கம்02

# பழைய பஸ் 'பொடி'கள் இன்று வடக்குக் கடலுக்குள் இறக்கம்

## மீன் உற்பத்தியைப் பெருக்க இப்படித் திட்டம்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூன் 11

கடற்றொழில், நீரியல் வளத்துறைத் திணைக்களமும் கடற்றொழில் கூட்டுத்தாபனமும் இணைந்து யாழ்ப்பாணம் மாவட்ட கடல் எல்லைப் பிரதேசத்துக்குள், போக்குவரத்துச் சபையினால் கைவிடப்பட்ட 30 பழைய பஸ்களின் வெளிச் சட்டகங்களை ('பொடி'களை) கடலில் இறக்கும் நடவடிக்கைகளை இன்று முதல் ஆரம்பிக்கின்றன.

# ராஜபக்ஷ அரசைக் காக்கவே சபைக்கு வருகின்றார் ரணில்

## சஜித் அணி சாட்டையடி



மக்களால் நிராகரிக்கப்பட்ட தலைவரான ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷ அரசைப் பாதுகாப்பதற்காகவே நாடாளுமன்றம் வருகின்றார். எனவே, அவரின் நாடாளுமன்ற வருகையானது எமக்கு எந்த விதத்திலும் அச்சுறுத்தலாக அமையாது.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

சஜித் பிரேமதாஸவுக்கு நம்பிக்கை தெரிவித்து 2

# திங்கள் தடை தளர்வு

## இராணுவத் தளபதி தகவல்



நாட்டில் தற்போது அமுலில் உள்ள பயணத்தடை எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 4 மணிக்கு தளர்த்தப்படும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

14ஆம் திகதிக்குப் 2

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்து செய்க!

## இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றியது ஐரோப்பிய நாடாளுமன்றம்

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும் எனக் கோரி ஐரோப்பிய நாடாளுமன்றம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

மேலும், இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைத் தற்காலிகமாக விலக்கிக் கொள்வதற்கான போதிய காரணங்கள் உள்ளனவா என்பது குறித்து ஆராயுமாறும் குறித்த தீர்மானத்தை நிறைவேற்றிய உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஸ்பெயின் – மொக்ரோ எல்லைப் பகுதி, ரஷ்யா மற்றும் இலங்கை விவகாரங்கள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றில் 2

# 2,738 பேருக்கு நேற்று தொற்று

இலங்கையில் நேற்றும் 2 ஆயிரத்து 738 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2

# ஈவிரக்கமற்ற கொரோனா வைரஸ்; 8 நாள் குழந்தையும் பலியெடுப்பு!



பிறந்து எட்டு நாள்களேயான பச்சிளம் குழந்தையொன்று கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்பட்ட நிமோனியாவால் உயிரிழந்துள்ளது.

கம்பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 2

# யாழ்ப்பாணத்தில் 116 பேர் உட்பட வடக்கில் 144 பேருக்கு கொரோனா

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாணத்தில் நேற்றும் 144 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் கண்டறியப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே அதிக தொற்றாளர்கள் இனங்காணப் 2

## Education Page

வாரம்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலைக்கதிர் பத்திரிகையில் மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் ஆங்கில பக்கத்திற்கு (Education page) தங்கள் பிள்ளைகளின் ஆங்கில மொழியிலான ஆக்கங்களை கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மறக்காமல் மாணவர்களின் முழுப்பெயர், பாடசாலை, தரம், தொடர்பு இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

Kalaikkathiredu@gmail.com

076 443 8622

**இன்றைய காலைக்கதிர் இதழில் தரம் - 07,08 இற்கான விஞ்ஞான பாட பயிற்சி வினாத்தாள்கள் இணைக்கப் பட்டுள்ளது.**

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மாதிரி இருந்தது. எதற்கும் விசாரிப்போம் என்று சூழலியலாளர் நண்பர் பொ.ஐங்கரநேசனை முதலில் துருவினேன்.

*“ஓமோம். அப்படி ஒரு செயற்பாடு உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படுவது வழமை. பெரிய கப்பல்கள் கடலில் மூழ்கிக் கிடக்கும் இடங்களில் மீனின் உற்பத்தி பல்கிப் பெருகுவது விஞ்ஞான ஆய்வுகள் ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதற்கு விஞ்ஞானபூர்வமான காரணங்கள் உண்டு. ஆகவே அதில் ஆட்சேபிக்க ஏதுமில்லை. இவ்விடயத்தில் இரண்டு விடயங்கள் உள்ளன. முதலாவது – கடலுற்பத்தி பெருகும். அடுத்தது – நாட்டின் கழிவகற்றல் செயற்பாடு பிரயோசனமான முறையில் பயன்படுத்தப்படுகின்றது. வடக்குக் கடலிலும் அதைச் செய்கின்றார்களா?”* – என்றார் ஐங்கரநேசன்.

ஆனாலும் செய்தியாளரின் செய்தியில் இருந்த ஒரு விடயம் – தகவல் – எனக்கு இடித்தது.

இந்த பழைய பஸ் ‘பொடிகளை’ ஏற்றிய கப்பல் காங்கேசன் துறைமுகத்தில் இருந்து ஐந்து மணி நேரம் பயணித்து இலங்கைக் கடல் எல்லைக்கு நெருக்கமாக இந்த பஸ்களைக் கடலில் இறக்குவது ஏன் என்பது எனக்கு விளங்கவில்லை.

கடல்எல்லையைஒட்டிமீன்பெருக்கத்தை ஏற்படுத்தி, இந்திய மீனவர்களுக்கு தாராளமாக மீன் கிடைக்க வழி செய்யப் போகின்றார்களா என்ற கேள்வி என்னுள்ளே எழுந்தது.

ஏன் அவ்வளவு தூரம் போக வேண்டும்? எங்கள் கரைகளை அண்டியதாக இரண்டொரு கிலோ மீற்றர் தொலைவில் இவற்றை இறக்கினால் பயன்கிட்டாதா என்ற கேள்வியும் எழுகின்றது.

பெரும்பாலும் கச்சதீவை அண்டிய கடலில் குத்தென இந்த ‘பொடிகளும்’, இனி சேகரிக்கப்படும் ‘பொடி’களும் போடப்படும் என்று கூறப்படுகின்றது.

மீன் பெருக்கத்துக்கான நடவடிக்கை என்று பெயர். ஆனால் அந்த பஸ் ‘பொடி’கள் எங்கெங்கோ போடப்பட்டிருக்கின்றன, எந்தெந்த இடங்களில் ட்றோலர்கள் சென்றால் இந்த பொடிகள் அவற்றில் முட்டி சேதத்தை ஏற்படுத்தம் என்ற விவரங்கள் எல்லாம் அவற்றைப் போடும் இலங்கைக் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் தரப்புக்கும், அவர்களை வழிநடத்தும் இலங்கைக் கடற்படைக்கும் தான் தெரியும். அதாவது இந்த ‘பொடிகள்’ இறக்கப்படும் இலங்கையின் எல்லைக்கு உட்பட்ட கடல் பிரதேசத்தில் பாதுகாப்பான கடல்பாதை எது என்ற விவரம் இனிமேல் இலங்கைத் தரப்புக்குத்தான் தெரியும்.

அடிக்கடி இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறும் தமிழக மீனவர்களின் ட்றோலர்கள், கஞ்சா கடத்தும் பாரிய கப்பல்கள் பாடு இனிச் சிக்கலாக இருக்கும்.

இது வெறுமனே மீன் பெருக்கத்துக்கான விதைப்பு மட்டுமல்ல, கடல் காவலுக்காக ஆங்காங்கே இறக்கப்படும் ஆப்பும் கூட என்றுதான் எனக்குத் தோன்றுகின்றது.

பற்ற வைத்திருக்கிறேன். புலனாய்வுச் செய்தியாளர்கள் மினகெட்டு நோண்டினால் இன்னும் பல விடயங்கள் இதில் வெளிவர வாய்ப்புண்டு.

★ ★ ★

சுகாதார மருத்துவத்துறை நடவடிக்கைகள் எல்லா மாகாணங்களிலும் சர்ச்சைக்குள் தான் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

எல்லா இடங்களிலும் பிரச்சினைகள். குளறுபடிகளுக்குக் குறைவேயில்லை. வடக்கு மாகாணமும் – குறிப்பாக யாழ். மாவட்டமும் – இதற்கு விதிவிலக்கல்ல. சுகாதாரத்துறை நிர்வாகிகளுக்கு எதிராகப் பல குற்றச் சாட்டுகள். அந்தத் துறையில் பல பிய்ச்சல் பிடுங்கல்கள்.

காலி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளரும், பிராந்தியத் தொற்று நோய்கள் பணிப்பாளரும் அதிரடியாகத் தூக்கப்பட்டுள்ளனர். ஒன்றுமில்லா பணிக்கு மாற்றப்பட்டுள்ளனர். தடுப்பூசி விவகாரம், கொரோனாக் கட்டுப்படுத்தல் நடவடிக்கை போன்றவை தொடர்பில் ஊடகத்தில் வந்த செய்தி ஒன்றை அடுத்தே இந்த அதிரடி நடவடிக்கை என்று தகவல்.

வடக்கிலும், மருத்துவ – சுகாதாரத்துறையை அம்பலப்படுத்தி எங்கள் ஊடகங்களில் செய்திகள் வெளியாகும் போது சுகாதார அதிகாரிகள் சீறுவது ஏன் என்று எனக்கு இப்போது புரிகின்றது.

காலி மாவட்ட அதிரடி இடமாற்றம் பற்றிய செய்தியை அடுத்து, வடக்கிலும் சுகாதார உயரதிகாரிகளுக்கு எதிரான தங்களின் புகார் கடிதங்கள், முறைப்பாடுகளை மருத்துவ, சுகாதாரத் துறைகளின் வடக்குப்பிராந்திய தொழிற்சங்கக்கிளைகள் முடுக்கி விட்டிருக்கின்றன என்று தகவல்.

ஏற்கனவே வடக்கில் சுகாதாரத்துறையில் பல உயர்பதவிகளுக்கு அதிகாரிகளை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப்போது முடுக்கி விடப்படும் புகார்களினால் பதில் நியமனங்களில் இருக்கும் யார், யாரின் பதவிக்கு வேட்டோ தெரியவில்லை. எல்லாம் திருக்கேதீஸ்வரக் கடவுளுக்குத்தான் வெளிச்சம்...!

– மின்னல் –

---

## ஈவிரக்கமற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குறித்த மரணம் தொடர்பான தகவல் சுகாதார அமைச்சால்வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டில் பதிவான மிகவும் குறைந்த வயது கொரோனா மரணமாக இது கருதப்படுகின்றது.

---

## ராஜபக்ஷ அரசைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஏன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்பது தொடர்பிலும், ரணிலின் நாடாளுமன்ற வருகை சம்பந்தமாகவும் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவை குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஐக்கிய மக்கள் சக்திக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது, ஒரு குழு தம்முடன் இணையவுள்ளது என்றெல்லாம் ராஜபக்ஷ அரசும், இந்த அரசுக்குச் சார்பானவர்களும் சமூகவலைத்தளங்கள் ஊடாக பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறு பரப்பப்படும் தகவல்கள் போலியானவை என்பதை நிரூபிப்பதற்காகவும், கட்சி உறுப்பினர்கள் சஜித் பக்கமே இருக்கின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதற்காகவுமே நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க என்பவர் மக்களால் நிராகரிக்கப்பட்ட தலைவர். அரசின் தேவைக்கேற்ப செயற்படக்கூடிய ஒருவர். ஏதேனும் ஒரு விதத்தில் பயன்பெறுவதற்காகவே ரணில் விக்கிரமசிங்கவை அரசு, பாதுகாப்பு வழங்கி வைத்துள்ளது.

எனவே, ரணிலின் கருத்தை நம்புவதற்கு மக்கள் இனியும் தயாரில்லை. மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவர் நாடாளுமன்றம் வருவது எமக்கு எவ்விதத்திலும் பிரச்சினையாக அமையாது – என்றார்.

---

## யாழ்ப்பாணத்தில் 116...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பட்டுள்ளனர்.

இதற்கமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 116 பேரும், வவுனியா மாவட்டத்தில் 23 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 03 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களில் தலா ஒருவர் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தொற்றுடன் கண்டறியப்பபட்ட 116 பேரில் கோப்பாயில் மற்றும் யாழ்ப்பாணம் மாநகர சபை பகுதிகளில் தலா 37 பேர் இனம் அடங்குகின்றனர்.

# தொடர் திருட்டுக்களில் ஈடுபட்டு வந்த நபர் மானிப்பாயில் நேற்று சிக்கினார்

மானிப்பாய் பொலிஸ் பிரிவில் தொடர் கடை உடைத்துக் கொள்ளையிட்டு வந்த பிரதான நபர் நேற்று பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கானை, சண்டிலிப்பாய் பகுதிகளில் உள்ள கடைகள் கடந்த சில நாள்களாக உடைக்கப்பட்டு அங்குள்ள பொருள்கள் திருடப்பட்டு வந்துள்ளன. கடையில் உள்ள பீடி, சிகரெட் முதற்கொண்டு பல பொருள்கள் திருடப்பட்டு வந்துள்ளன.

குறித்த சந்தேகநபர் தனி ஒருவராக திருட்டில் ஈடுபட்டு வந்துள்ளமையுடன் முகத்தை மூடி மாஸ்க் போட்டு, தலையைச் சுற்றி துணியால் கட்டியபடி சி.சி.ரி.வி. கமாரா முன்னிலையிலேயே பல திருட்டு சம்பவங்களில் ஈடுபட்டு வந்திருந்தார்.

குறித்த கமராப் பதிவுகளை வைத்து பிராந்திய பொலிஸ் புலனாய்வுத்துறையினர், விசேட புலனாய்வுத்துறையினர் மற்றும் மானிப்பாய் பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவினர் போன்றோர் மேற்கொண்ட விசாரணையில் சந்தேக நபர் நேற்றுக் காலை மானிப்பாய் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டார்.

அவரிடமிருந்து பெறுமதியான திருடப்பட்ட பொருள்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

சந்தேகநபர் சங்கானைப் பகுதியை சேர்ந்த 20 வயதுடைய இளைஞர் எனவும், போதைப் பாவனைக்கு அடிமைப்பட்டதாலே தொடர் திருட்டில் இவர் ஈடுபட்டு வந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

---

## பழைய பஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மீன் உற்பத்தியை பெருக்கும் நோக்கில் கைவிடப்பட்ட பஸ்களை கடலில் இறக்கும் திட்டம் கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் அடுத்த கட்டம் இன்று காங்கேசன் துறையில் இருந்து ஆரம்பிக்கப்படுகின்றது.

இந்தப் பணிகளை நேரடியாகக் கவனிப்பதற்காகக் கடற்றொழில் திணைக்களம் மற்றும் கடற்றொழில் கூட்டுத் தாபனத்தின் உயர் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர். இந்த அதிகாரிகளின் முன்னிலையில், ஏற்கனவே பாவனையில் இருந்து கைவிடப்பட்ட பஸ்களின் வெளி ‘பொடிகள்’ இதற்காக காங்கேசன்துறை துறைமுகத்திற்கு எடுத்து வரப்பட்டு நேற்று மாலை கப்பலில் ஏற்றப்பட்டன.

பழைய பஸ் ‘பொடிகளை’ ஏற்றிய கப்பல் இலங்கைக் கடற்பரப்பின் எல்லைப் பகுதிகள் ஊடாக இன்று 5 மணி நேரம் பயணித்து இலங்கைக் கடல் எல்லைக்குள் அவற்றை இறக்கவுள்ளது.

இப் பணிக்காக ஏற்கனவே கைவிடப்பட்ட பஸ்களில் மன்னார் போக்குவரத்துச் சாலைகளில் இருந்து 15 பொடிகளும் யாழில் இருந்து ஒரு தொகையும் காங்கேசனுக்கு எடுத்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

---

## 2, 738 பேருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இரண்டு இலட்சத்து 16 ஆயிரத்து 134 ஆக அதிகரித்துள்ளது.

வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 31 ஆயிரத்து 986 உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 82 ஆயிரத்து 238 ஆக உயர்வடைந்துள்ளது.

---

## திங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பின்னரும் பயணக் கட்டுப்பாடு நீடிக்கப்படும் என வெளியாகியுள்ள தகவல் போலியானது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் இரத்துச் செய்யப்பட வேண்டும் என்ற தீர்மானத்துக்கு ஆதரவாக 628 வாக்குகளும், எதிராக 15 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 40 உறுப்பினர்கள் வாக்களிப்பில் பிரசன்னமாகவில்லை.

இலங்கையில் மனித உரிமை நிலைமைகள் மோசமடைந்து செல்வதாக அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையில் வெளியிடப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது எனவும் குறித்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், சர்ச்சைக்குரிய பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கடும் எதிர்ப்பை வெளியிடுகின்றனர் எனவும் தீர்மானம் தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை கைவிடுவது, மறு ஆய்வு செய்வது குறித்த தங்களது வாக்குறுதிகளை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும், சர்வதேச நடைமுறைகளைப் பின்பற்றும் புதிய சட்டத்தை உருவாக்க வேண்டும் எனவும் தீர்மானம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவோம், மனித உரிமைகள் தொடர்பான 27 சர்வதேச பிரகடனங்களை நடைமுறைப்படுத்துவோம் என்ற வாக்குறுதியின் அடிப்படையிலேயே 2017 இல் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இலங்கை மீளப்பெற்றுக்கொண்டது எனவும் தீர்மானம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை தனது மனித உரிமை கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை ஒரு செல்வாக்குச் செலுத்தும் விடயமாக ஐரோப்பிய ஆணைக்குழுவும் ஐரோப்பிய வெளிநாட்டு செயற்பாட்டு சேவையும் பயன்படுத்த வேண்டும் எனவும் நாடாளுமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இறுதி முயற்சியாக இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை தற்காலிகமாக விலக்கிக்கொள்ள முடியுமா என்பது குறித்து ஆராயுமாறும் தீர்மானம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் ‘காலைக்கதிர்’ சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

# நாட்டில் டெங்கு நோயின் தாக்கமும் எதிர்வரும் வாரத்தில் அதிகரிக்கலாம்

## தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு எச்சரிக்கை

இலங்கையில் கொவிட் பரவலின் மத்தியில், மழை மற்றும் வெள்ள நிலைமை காரணமாக வரும் வாரங்களில் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு இயக்குநர் கலாநிதி அருண ஜெயசேகர இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது கொழும்பு மாவட்டம் அதிக ஆபத்தில் உள்ளது. ஏனெனில் மூன்றில் ஒரு பங்கு டெங்குத் தொற்று கொழும்பு மாவட்டத்திலிருந்து பதிவாகின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

மேலும் ஏழு மாவட்டங்களை அதிக ஆபத்து நிறைந்த பகுதிகளாக தாம் அடையாளம் கண்டுள்ளோம் என அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் வரும் வாரங்களில் டெங்கு . கம்பஹா, களுத்துறை, காலி, இரத்தினபுரி , கேகாலை, குருநாகல் மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் பரவக்கூடும் என்று வைத்திய கலாநிதி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டு பதிவான தொற்றுக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படக்கூடும் என்றும், ஜீன், ஜீலை மற்றும் ஓகஸ்ட் மற்றும் நவம்பர் மாதங்களில் தொற்றுகள் மற்றும் இறப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் ஜெயசேகர எச்சரித்துள்ளார்.

மேல் மாகாணத்தில் இருந்து அதிக எண்ணிக்கையிலான இறப்புகள் மற்றும் நோயாளிகள் பதிவாகியுள்ளனர். மேலும், டெங்கு தொடர்பான நான்கு இறப்புக்கள் பதிவாகியுள்ளன என்றும் ஜெயசேகர கூறினார்.

தொற்றுநோயியல் பிரிவு தகவல்படி, இந்த ஆண்டு நாட்டின் அனைத்து பகுதிகளிலிருந்தும் 7 ஆயிரத்து 932 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளனர். 2 ஆயிரத்து 344 டெங்கு நோயாளிகளுடன் மேற்கு மாகாணம், ஏனைய மாகாணங்களை விட மிக அதிகமான தொற்றாளர்களைக் கொண்டுள்ளது.

# யாழ். கிளினிக் நோயாளர்களுக்கு மருந்துகள் தபாலில் வீடுகளுக்கு!

## பணிப்பாளர் அறிவிப்பு

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்களத்தில் (கிளினிக்) வைத்தியசேவை பெறும் நேயாளர்களுக்கான மருந்து வகைகள் நாட்டில் நிலவும் கொவிட் 19 நிலைமை தொடர்பாக தபால் மூலமாக அனுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே நோயாளர்கள் தங்களுக்கு தேவையான மருந்து வகைகளை கீழ் குறிப்பிட்ட தெலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தங்களுடைய விவரங்கள் ( பெயர், கிளினிக் இல முழுமையான விலாசம், தொடர்பு கொள்ள வேண்டிய தெலைபேசி இலக்கம்) என்பவற்றை அறியத் தந்தால் அந்த மருந்துகள் உங்களுக்கு தபால் மூலமாக எவ்வித கட்டணமும் இன்றி அனுப்பி வைக்கப்படும்.

நோயாளர்கள் வசதி கருதி ஏற்கனவே அறிவிக்கப்பட்ட தொலைபேசி இலக்கங்களுடன் மேலும் இரண்டு நேரடி தொலைபேசி இலக்கங்கள் இச்சேவையில் இணைக்கப்பட்டுள்ளன. அத் தொலைபேசி இலக்கங்கள் 021 222 2268, 021 315 2921 என்பனவாகும்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நோயாளர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள் 021 221 4249, 021 222 2261, 021 222 3348 நோயாளர்களை பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

# சமையல் எரிவாயு விற்பனை விசேட வர்த்தமானி வெளியீடு



சமையல் எரிவாயு விற்பனை தொடர்பில் விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

சமையல் எரிவாயு விற்பனை செய்யும், விநியோகம் செய்யும் மற்றும் உற்பத்திசெய்யும் அனைத்து தரப்பினருக்கும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் 12.5 கிலோ கிராம் எடையுடைய சமையல் எரிவாயு தட்டுப்பாடு இன்றி விநியோகம் மற்றும் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

12.5 கிலோ கிராம் எடையுடைய சமையல் எரிவாயு சிலிண்டர்களை போதியளவு கையிருப்பில் பேணுமாறு வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

# சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரால் மாவிட்டபுரம் மக்களுக்கு உலருணவு







சுன்னாகம், ஜூன் 11

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் மாவிட்டபுரம் தெற்கு வள்ளுவர் சனசமூக நிலையத்தில் வைத்து 25 குடும்பங்களுக்கு கடந்த புதன்கிழமை வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர்களும் ஏ.வி.ஆர். அறக்கட்டளை நிர்வாகிகளுமாகிய லயன் சிவகுமார் - லயன் விசாலினி தம்பதிகள் இணைந்து இந்தக் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகளுக்கு அனுசரணை வழங்கினர்.

இந்த நிகழ்வில் இவர்களுடன் சுன்னாகம் லயன்ஸ் கழக செயலாளரும் வலி. வடக்கு பிரதேசசபை உறுப்பினருமாகிய லயன் சி. ஹரிகரன், சுன்னாகம் லயன்ஸ் கழக நிர்வாக உத்தியோகத்தர் லயன் சி. கௌரீஸன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.




# முதற்களப் பணியாளர்களாக கடமையாற்றுவோருக்கு சுகாதார உபகரணங்கள் அரச அதிபரிடம் வழங்கல்!

## தொண்டு நிறுவனங்கள் பேருதவி





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் முதற்களப் பணியாளர்களாக மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான சுகாதார உபகரணங்கள் அடங்கிய தொகுதியை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட கொவிட் தடுப்பு செயலணியின் தலைவருமாகிய கே.கருணாகரனிடம் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

கொவிட் நிலையைத் தொடர்ந்து கள அலுவலர்களாக கிராமப்புற கள கடமைகளில் ஈடுபடும் அரசு உத்தியோகத்தர்களின் சுகாதார பராமரிப்புக்காக சுகாதார உபகரணங்களை வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள அரச அலுவலகங்களுக்கு தம்மாலான உதவிகளை வழங்கிவரும் Street Child மற்றும் Beds ஆகிய தொண்டு நிறுவனங்கள் இணைந்தே முகமூடிகள், கிருமிநாசினிகள் மற்றும் சவர்க்காரம் உள்ளிட்ட பொருள்களை இவ்வாறு கையளித்துள்ளன.

இதன்போது முறையான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த், திட்டமிடல் பணிப்பாளர் பு.சசிகலா, மாவட்ட தகவல் அதிகாரி வடிவேல் ஜீவானந்தன், தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளான ஏ.கஜேந்திரன், டிராஜ் டொமினிக் உள்ளிட்ட மாவட்ட செயலக திட்டமிடல் பிரிவின் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## ஹரின் காணும் கனவு

ஆட்சி மாற்றத்துக்காக ஒன்றிணையுங்கள் என்று எதிர்க் கட்சிகளை நோக்கி அழைப்பு விடுத்திருக்கின்றார் எதிர்க்கட்சிப் பிரமுகர் ஹரின் பெர்னாண்டோ எம்.பி.

ஆட்சியைக் கவிழ்ப்பதுவும், கவிழ்க்க முயற்சிப்பதுவும் எதிரணியின் – எதிர்க்கட்சிகளின் – இலக்குத்தான். எப்போதும் அந்தச் சிந்தனையிலேயே எதிர்க்கட்சிகள் இருக்கும். அது தவறல்ல.

ஆனால், ஆட்சி மாற்றம் குறித்து பேசக் கூடிய சமயமா இது என்பதுதான் கேள்வி. அதற்கான சாத்தியக் கூறே இல்லை.

ஆட்சித் தரப்பில் ஒரு சிறிய பிளவு,வெடிப்பு, முரண்பாடு இருக்குமானால் அதனூடாகப் புகுந்து ஆட்சியைக் கவிழ்ப்பது என்பதும், புதிய அரசை அமைக்க முயல்வது என்பதும் வாஸ்தவம்தான்.

ஆனால், அப்படி ஏதும் முரண்பாடு வெளிப்படையாக ஆட்சித் தரப்புக்குள் தென்படவில்லை.

ஆட்சித் தரப்புக்கு எதிராக மக்களின் உணர்வலைகள் பீறீட்டு வருகின்றன என்பதும் –

அரசுத் தரப்பின் எம்.பிக்களிடையே அதிருப்தி முணுமுணுப்புகள் கேட்கத் தொடங்கியிருக்கின்றன என்பதும் – உண்மைதான்.

ஆனால் அவை இன்னும் அரசுத் தரப்புக்குள் ஒரு சிறிய விரிசலையோ – ஒரு கீறலையோ – வெளிப்படையாக ஏற்படுத்தவில்லை என்பதும் கவனிக்கப்பட வேண்டும்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவி என்ற சவுக்குத் தன் கையில் இருக்கும் வரை மொட்டுக் கட்சியினர் என்ற மந்தையை மேய்ப்பதற்கு கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இப்போதைக்குச் சிக்கல் ஏதும் இருக்கப் போவதில்லை.

நாடு பல நெருக்கடிகளை வரிசையாக எதிர்கொண்டபடி இருக்கின்றது.

ஒரு புறம் கொரோனாப் பேரிடர். அதைக் கையாள்வதில் இந்த ஆட்சிப் பீடம் பெருந்தவறிழைத்து வருகின்றது என்ற எண்ண ஓட்டம் பொதுமக்கள் மத்தியில் கிளர்ந்து வந்தாலும் அரசுக்கு எதிரான ஒரு பகிரங்க மக்கள் எழுச்சியாக வெளிப்பட்டு அரசுத் தலைமைக்கு நெருக்கடியாக அது மாறுவதற்கான வாய்ப்புகள் துர்லபமே.

கொரோனா விவகாரம் தொடர்பில் அரசு மீது மக்களுக்கு சீற்றம், ஆத்திரம் ஏற்பட்டாலும் கூட, அது மக்கள் உணர்வாக நீடித்தாலும் கூட, இது விடயத்தில் மக்கள் தமது எதிர்வினையை வெளிப்படையாகக் காட்ட முடியாதவாறு அதே கொரோனாவை ஒட்டிய சுகாதார – மருத்துவ கட்டுப்பாட்டு விதிகள் தடுத்து வருகின்றன என்பதும் நோக்கற்பாலது.

கொரோவால் ஏற்பட்ட பொருளாதாரப் பாதிப்பு, அதனால் மக்கள் எதிர்கொள்ளப்போகும் கஷ்டங்கள், விஷப் பதார்த்தங்களுடன் இலங்கைக் கரையில் 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பல் எரிந்தமையால் எழக் கூடிய சூழலியல் பாதிப்புகள், கடற்றொழிலாளரின் வாழ்வாதாரப் பாதிப்புகள், இரசாயன உரங்கள், களைகொல்லிகளுக்கான முழுத் தடையால் எதிர்கொள்ளப் போகின்றன விவசாய உற்பத்திப் பாதிப்புகள், விவசாயத் துறையினர் எதிர்கொள்ளப் போகும் நெருக்கடிகள், ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் தீர்மானத்தை அடுத்து இலங்கைக்கு எதிராக உலக நாடுகள், பன்னாட்டு சமூகம் எடுக்கப்போகும் அதிரடி நடவடிக்கைகள் – இப்படி இந்த அரசாங்கம் நேரடியாகத் தலைகொடுக்க வேண்டிய பிரச்சினைகள், சிக்கல்கள் வரிசையாகக் காத்து நிற்கின்றன.

அவை எல்லாம் ஒன்று திரண்டு வரும்போது ஆட்சித் தரப்புக்கு நெருக்கடி வரும். உள்வீட்டுப் பூசல்கள், உள்குத்துக் குழப்பங்கள் எல்லாம் உருவாகும். ஆனால் அதற்கு நாம் சற்றுக் காலம் காத்திருக்க வேண்டியிருக்கும்.

எதிர்க்கட்சிப் பிரமுகர் ஹரின் பெர்னாண்டோ குறிப்பிடுகின்றமை போல எதிர்க்கட்சிகள் ஒன்றித்து, கட்டுறுதியாகச் செயற்பட வேண்டியது காலத்தின் தேவைதான்.

ஆனால் அவர் குறிப்பிடுவது போன்று – கணிப்பிடுவது போன்று – ஆளும் தரப்பை வீழ்த்தி மாற்று அரசை அமைப்பதற்கான திட்டம் குறித்துப் பேசக் கூடிய நேரம் இதுவல்ல.

நாட்டைத் தவறாக வழி நடத்தி, பிழையான பாதையில் நடைபோடும் கோட்டா அரசை வீட்டுக்கு அனுப்ப வேண்டியது முக்கியம்தான். ஆனால் அதற்கான கால சந்தர்ப்பம் இன்னும் வரவில்லை. அதற்குள் அந்தரப்பட்டு, அப்படி அரசை பின்னாளில் தன்னும் வீழ்த்துவதற்கான எத்தனங்களில் முற்கூட்டியே ஈடுபட்டு நிலைமையை நிரந்தரமாகக் குழப்பி விடாமல் இருப்பது முக்கியமாகும்.

அப்படியானால், ஹரின் பெர்னாண்டோ எம்.பி. ஏன் இப்படி எதிரணி எல்லோரையும் ஒன்றுபடக் கோரும் அறிவிப்பை அவசரப்பட்டுக்கொண்டு – முந்திக் கொண்டு – வெளியிட்டார் என்ற கேள்வி எழுகின்றது.

இப்போது பிளவு – முரண்பாடு – பிரிவு – ஏற்படப் போவது என்று குறிப்பிடப்படுவது ஆளும் தரப்பில் அல்ல. எதிர்க்கட்சித் தரப்பில்தான்.

ஐ.தே.கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க தமது கட்சிக்குரிய தேசியப்பட்டியல் எம்.பியாக நாடாளுமன்றத்துக்குள் நுழையும் போது எதிரணி பிளவுபட்டு ஒரு சாரார் ரணிலுக்குப் பின்னால் செல்வர் என்று கூறப்படுகின்றது. அப்படி எதிரணிக்குள் பிளவு வரலாம் என்ற எச்சரிக்கை செய்தி பரமாறப்பட்ட சூழலிலேயே அதைத் திசைதிருப்பும் விதத்தில் இப்படி ஆளும் கட்சியை வீழ்த்தி மாற்று அரசை அமைப்பது குறித்து கனவு காண்கின்றார் ஹரின் பெர்னாண்டோ. அவ்வளவே.

## மதங்களுக்கிடையே குரோதங்களை வளர்க்கும் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்

### அங்கஜன் எம்.பி. தெரிவிப்பு



மதங்களுக்கிடையே குரோதங்களை ஏற்படுத்தி அமைதியை சீர்குலைக்கும் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளிவைக்க வேண்டும் என நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளரும், யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சி – மிருசுவில் பகுதியில் அமைந்திருந்த குட்டிப் பிள்ளையார் ஆலயம் கடந்த 08 ஆம் திகதி அதிகாலை வேளையில் இனந்தெரியாதவர்களின் வாகனத்தால் மோதி இடித்தழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஊடகங்களுக்கு அனுப்பி வைத்திருந்த கண்டன அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

மேலும், தற்போது நாட்டில் இருக்கும் ஒவ்வொருவரும்கொடியகொரோனாதொற்றுக்கு எதிராக போராடி வரும் நிலையில் மக்களின் நம்பிக்கைக்குரிய, பழைமை வாய்ந்த மதத்தலம் ஒன்றை சேதமாக்குவதென்பது மக்களை மேலும் பாதிப்புக்குள்ளாக்குகின்றது.

இவ்வாறான செயற்பாடுகள் மதங்களுக்கிடையே குரோதங்களை ஏற்படுத்தி நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்துகின்றது. மதத் தலத்தை வாகனத்தால் மோதி சேதப்படுத்தியவர்களை விரைவாக கண்டறிவதற்கு பொலிஸாருக்கு அழுத்தம் கொடுத்துள்ளேன். அவர்களை சட்டத்தின் முன்நிறுத்தி சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து மதங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த பொறுப்புக் கூற கூடிய நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் நடவடிக்கை எடுப்பேன். உலகமே பாரிய நெருக்கடிக்குள் இருக்கும் இவ்வேளையில் நாம் அனைவரும் பொறுப்புணர்வுடன் நடக்க வேண்டியது எமது கடமையாகும். – எனக் குறிப்பிட்டிருந்தார்.

## வடக்கின் பிரதான வைத்தியசாலைகளுக்கு ஒதுக்கிய நிதியை மாற்றியமைக்க முயற்சி!

சுகாதாரத்துறை தற்போது நாட்டின் பிரதான துறையாகக் காணப்படுகின்றது. வடக்கு மாகாணத்தில் மிகவும் பிரதான வைத்தியசாலையாகிய தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவு அமைப்பதற்கும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் தாதியர் விடுதி அமைக்கப்படுவதற்கும், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நில கட்டுமானத்துக்கும் என வடமாகாண ஆளுநரின் சிறப்பு ஏற்பாட்டில் மாகாண விசேட அபிவிருத்தி நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஆனால், கடந்த புதன்கிழமை நடைபெற்ற அதிகாரிகள் மட்டத்திலான கூட்டத்தில் இந்த நிதியை வேறு தேவைகளுக்கு மாற்றியமைக்க மாகாணத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரிகளில் ஒருவரால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்று மூன்று வைத்திய சாலைகளின் சமூகத்தினர் விசனம் தெரிவிக்கின்றனர்.

கொரோனா இக்கட்டான காலகட்டத்தில் மாகாண நிர்வாகத்துக்குரிய இந்த வைத்தியசாலைகளின் தேவைகளை வைத்திய சேவைகளைப் பூர்த்திசெய்ய அரசிடமிருந்து போதிய நிதிகள் கிடைக்கப்பெறாமையால், தமது முயற்சியால் தனியாரிடமிருந்து நிதிகளையும் உதவிகளையும் சிரமங்களுக்கு மத்தியில் பெற்று தாம் நிறைவேற்றி வரும் இந்த நேரத்தில், அரச அதிகாரிகள் தமது சுய தேவைகளுக்காக இவ்வாறு செயற்படுகின்றமை வேதனையளிக்கின்றது என்றும் அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

## கிழக்கு மாகாணத்தில் இதுவரையில் 10 ஆயிரத்து 842 பேருக்குத் தொற்று!

கிழக்கு மாகாணத்தில் இதுவரையில் 10 ஆயிரத்து 842 இற்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்று(வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.அர்.எம்.தௌபீக் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர் –

கடந்த 24 மணித்தியாலங்களில் மட்டக்களப்பில் அதிகளவிலான தொற்றாளர்களாக 166 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 52 பேரும் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், அம்பாறை சுகாதார அதிகாரி பிரிவில் 03 பேரும், கல்முனையில் 17 தொற்றாளர்களும் அடங்கலாக 238 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த 7 நாள்களில் ஆயிரத்து 228 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். ஆகவே இந்த வாரம் நோயாளர்களது அதிகரிப்பை அவதானிக்கக் கூடியதாக இருப்பதால் பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் இதுவரை 200 மரணங்கள் பதிவாகியுள்ளமையுடன் 46 மரணங்கள் இந்த வாரத்தில் பதிவாகியுள்ளன. – எனக் குறிப்பிட்டுள்ளார்.

## மட்டக்களப்பு – நாவற்காடு வைத்தியசாலையில் கொவிட் இடைத்தங்கல் சிகிச்சைப் பிரிவு திறப்பு!





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு நாவற்காடு பிரதேச வைத்தியசாலையின் ஒரு பகுதியை கொரோனா இடைத்தங்கல் சிகிச்சைப் பிரிவாக கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி நாகலிங்கம் மயூரன் மற்றும் நாவற்காடு பிரதேச வைத்தியசாலையின் வைத்தியர் உள்ளிட்டோர் அடங்கிய வைத்தியர்களால் இந்தச் சிகிச்சைப் பிரிவு உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இங்கு நூறு நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறக்கூடியதாக அமைந்துள்ளதெனவும், இன்றுவரை மட்டக்களப்பு மாவட்டத்தில் திறக்கப்பட்ட கொவிட் சிகிச்சை நிலையங்களில் 667 நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கும் வகையில் 667 கட்டில்கள் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி நாகலிங்கம் மயூரன் இதன்போது தெரிவித்தார்.



# பொது அறிவு தினசரி ஒரு பரீட்சை

தொகுப்பு -
P.S.V.தினேஷ் B.A(Hons)
Geography Special.,
M.Phil in Geography.

இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம்.
தினமும் பத்துக் கேள்விகள் இப்பகுதியில் இடம் பெறும்.அன்றன்று கேள்விக்குரிய உங்கள் பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து தயார் செய்யுங்கள்....
அதனை அடுத்த நாள் காலை 8 மணிக்கு முதல் **Kalaikkathiredu@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.
கேள்வி பிரசுரமாகி இரண்டாவது நாளில் அக் கேள்விக்குரிய விடைகளும், சரியாக விடையளித்த பத்துப் பேரின் விவரங்களும் பிரசுரமாகும்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

## 17ஆவது போட்டிக்குள் நுழைவோமா?

**161. இலங்கையில் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்ட பெண்கள் பாடசாலை எது?**
**162. அமெரிக்காவின் நாணயம் எது?**
**163. மகாத்மா காந்தியின் சுயசரிதை நூலின் பெயர் என்ன?**
**164. மின்குமிழில் ஒளிரும் இழையின் பெயர் என்ன?**
**165. உலகின் மிகப் பழைமையான தேசப்படத்தை வரைந்தவர் யார்?**
**166. உலக அன்னையர் தினம் எப்போது?**
**167. சூழலை சுத்தப்படுத்தும் பறவை (தோட்டி) எது?**
**168. பத்தாவது ஆண்டு நிறைவு விழா எவ்வாறு அழைக்கப்படும்?**
**169. 2015 சர்வதேச உலகக் கோப்பையில் தொடர்ந்து 4 போட்டிகளில் சதம் அடித்த இலங்கை வீரர் யார்?**
**170. இலங்கையில் ஆட்சி செய்த கடைசி மன்னன் யார்?**

பெயர் :- ....................................................
அடையாள அட்டை:- ..................................
முகவரி :- ....................................................
மின்னஞ்சல் முகவரி:- ..................................
தொலைபேசி இலக்கம்:- ............................

## 15ஆவது போட்டிக்குரிய பதில்கள்

141) UNHCR
142) 1863
143) Robert baden powel 1907
144) நோர்வே
145) கொழும்பு
146) சந்திரிக்கா குமாரதுங்க
147) April 12
148) 1996
149) வில்லியம் கோபல்லாவ
150) உதயதாரகை

## 09ஆம் திகதி வெளியான 15ஆவது போட்டிக்கு சரியான விடையளித்தோர் விவரம்

1. ஜெ. வினோஜன் - குடத்தனை
2. ஆர். மாலதி - உடுப்பிட்டி
3. ஐ. கார்த்திகன் - யாழ்ப்பாணம் (09 கேள்விக்கு சரியான பதில்)
4. ஏ.துசான் - நீர்வேலி (09 கேள்விக்கு சரியான பதில்)
5. கே. ஸ்ரீதரன் - கொழும்பு (08 கேள்விக்கு சரியான பதில்)

## 10 மாவட்டங்களுக்கு 10 லட்சம் சினோபோர்ம் விஞ்ஞான முறைப்படி தடுப்பூசி ஏற்றும் திட்டம்

கொழும்பு, ஜூன் 11

கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை விஞ்ஞான முறைப்படி இடம் பெறுவதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

இதேநேரம், தடுப்பூசி ஏற்றும் வேலைத் திட்டத்தின் பிரதிபலன்களை எதிர்வரும் ஜூலை மாதமளவில் கண்டுகொள்ள முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். இதேவேளை, பத்து லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகள் பத்து மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## கொரோனா மரணங்கள் 28 வீதத்தால் அதிகரிப்பு

நாட்டில் கொவிட் மரணங்கள் 28 வீதத்தால் உயர்வடைந்துள்ளன என கொவிட் தடுப்பு தொடர்பான இராஜாங்க அமைச்சர் வைத்தியகலாநிதி சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

கடந்த வாரத்துடன் ஒப்பீடு செய்யும் போது கொவிட் மரணங்கள் 28 வீதமாகவும் தொற்று உறுதியானவர்கள் சிறிதளவு உயர்வடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொவிட் நோய்த் தொற்று நிலைமை குறையவில்லை எனவும் அதிகரித்து செல்லும் நிலைமையையே அவதானிக்க முடிகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயணத்தடையை நீடிப்பதா இல்லையா என்பதை 14 ஆம் திகதி தரவுகளின் அடிப்படையில் அரசாங்கம் தீர்மானிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொவிட் தடுப்பூசி பெற்றுக் கொள்வதற்கான முனைப்புக்கள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும், நோர்வே, பிரான்ஸ், அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளுடன் பேச்சு நடத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்ட வைத்தியசாலைக்கு விஜயம் செய்திருந்த போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கே அவர் இவ்வாறு பதிலளித்திருந்தார்.

## மட்டக்களப்பு - வாகரை பழங்குடி மக்களுக்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மாசிங்க உதவி!







(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு வாகரை பிரதேசத்தின் பயணக் கட்டுப்பாடு காரணமாக உணவின்றி பாதிக்கப்பட்டுள்ள பழங்குடி குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் நேரடியாக சென்று நிவாரணப் பொதிகளை வழங்கிவைத்துள்ளனர்.

வாகரை பிரதேசத்தின் பழங்குடி மக்களின் தலைவர் அம்பலவர் கே. நல்லதம்பி வேலாயுதம் பயணத்தடை காரணமாக தமது மக்கள் உணவின்றி அல்லலுறுகின்றனர் எனத் தெரிவித்து இலங்கைக்கான ஆதிவாசிகளின் தலைவர் ஊர்வக்கே வன்னிலத்தோவிடம் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் அவர் மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்கவிடம் இந்த விடயம் தொடர்பான கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

அதனடிப்படையில் பழங்குடி மக்களின் குறைகளைக் கேட்டறிந்து கொண்ட பொலிஸ் அத்தியட்சகர் தமது வழிகாட்டலில் இந்த நடவடிக்கையை முன்னெடுத்தார் என தலைவர் நல்லதம்பி வேலாயுதம் தெரிவித்தார். பணிச்சங்கேணி, மாங்கேணி, கிருமிச்சை, குஞ்சன் கல்குளம் மற்றும் கொக்குவில் போன்ற கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு இந்த நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

தங்களுக்கு உணவு பொருள்கள் வழங்கி வைத்த பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான குழுவினருக்கு தமது நன்றியைத் தெரிவித்ததுடன் மேலும் இது போன்ற தமது மக்கள் ஏனைய கிராமங்களில் வாழ்ந்து வருகின்றனர் எனவும் அவர்களுக்கும் நிவாரணப் பொதி வழங்க ஏற்பாடு செய்து தருமாறும் தலைவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

இந்த நிவாரண செயற்பாட்டில் வாழைச்சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பி.எம்.ஜெயசுந்தர, மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி பி.கே.கெட்டியாராச்சி, ஏறாவூர், வாழைச்சேனை மற்றும் வாகரை பொலிஸ் பொறுப்பதிகாரிகளான ஜெயந்த தனஞ்சய பெரமுன, ஜ.பி.விஜேயவர்த்தன மற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர்களும் இதன் போது கலந்து கொண்டிருந்தனர்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத் தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர்.
'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர்.
இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப் புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனி தாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப் பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன் றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்


1987இல் அம்பாறை அறந்தலாவையில் அரங்கேறிய படுகொலைகளை ஒட்டி அமைக்கப்பட்ட நினைவுச் சின்னத்தை பின் நாள்களில் பார்வையிடும் மஹிந்த ராஜபக்ஷ

## அங்கம் 32

**103. அடுத்த நாள் கன்பரா சந்திப்பு பின் போடப் பட்டதா?**

நான் அதை ஊக்குவிக்கவில்லை. பல சிந்தனைகளின் பின்னர், அதைத் தொடர்வது என்று தீர்மானித்தோம். அவர் சில நேரங்கள் கண்மூடி சிந்தித்து விட்டு 'ரவி நான் பகத்சிங்கைத்தான் உதாரணம் காட்டப்போகிறேன்' என்றார். இருவரும் அதை ஒட்டிய தகவல்களைத் தேடி எடுத்தோம் – தேவை ஏற்படின் அவற்றைப் பிரதிபண்ணி வெளிவிவகார அதிகாரிகளிடையே விநியோகிப்பதற்காக.

கூட்டத்தில் அறந்தலாவைக் கொலைகள் குறித்துக் கேள்விகள் எழுப்பப்பட்டன. அமிர்தலிங்கம் தனக்குரிய பாணியிலும் ஆளுமையிலும் அவற்றைப் பின்வருமாறு கையாண்டார்:-

நான் பாலஸ்தீன விடுதலை அமைப்பு (Palestine Liberation Organization) போன்ற கட்டமைப்புக் கொண்ட ஒரு விடுதலை அமைப்பின் தலைவனோ, பிரதிநிதியோ அல்லன். எமது பெயர் தமிழர் விடுதலைக் கூட்டணி என்பது. (Tamil United Liberation Front). ஆயினும், தலைவர் யாசீர் அரபாத்தைப் போன்று நாங்கள் ஆயுதப் போராட்டத்தைக் கட்சியோடு இணைத்தவர்கள் அல்லர். பல வருடங்களாக வன்முறையற்ற, சாத்வீக உரிமைப் போராட்டத்தை காந்தியின் வழியிலே நடத்தி வருகிறோம். அதுதான் நான் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியின் நிலைப்பாடு. ஆனால் காந்தியின் போராட்டங்களின் போது எப்படி காந்தி விரும்பினாரோ, விரும்பவில்லையோ, ஆதரித்தாரோ, ஆதரிக்கவில்லையோ சுபாஷ் சந்திரபோஸ் இந்திய விடுதலைக்கான படையை அமைத்தார். பகத்சிங் போன்ற இளைஞர்கள் வன்முறையைக் கையில் எடுத்தார்கள். ஜாலியன்வாலா படுகொலைக்குப் பிறகு பஞ்சாப் இளைஞர்கள் கிளர்ந்தார்கள். அதே போல எங்களது இளைஞர்களும் இனவெறியின் கொடூரங்கள் தாங்கமுடியாத நிலையில் தம்மைப் பாதுகாக்கவும் தமது இனத்தைப் பாதுகாக்கவும் வன்முறையைக் கையில் எடுக்கிறார்கள். – என்றார்.

ஆனாலும் ஒன்றுமே அறியாத பொதுமக்களை நோக்கி வன்முறை திட்டமிட்டு ஏவப்பட்டது என்ற கேள்வி எழுந்தது.

அதற்கு அவர், சில புத்த குருமார் அளவுக்கும் மேலான இனத்துவேசம் கக்குகிறார்கள். அப்படியான சிலருக்கு இதில் குறிவைக்கப்பட்டதா என்பது தெரியாது. ஆனால் முழுவிவரமும் தெரியாமல் பேச முடியாது. – என்றார்.

பின்னர் தமிழ்ப் பொதுமக்களை மையமாக வைத்து எவ்வளவு அட்டூழியங்கள் நடத்தப்பட்டன என்று மனக் களஞ்சியத்திலிருந்து எத்தனையோ படுகொலைகளை வரிசையாக அடுக்கினார். விடாமல் இவைக்கெல்லாம் மூலகாரணம் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காணவிரும்பாமல், அதை இழுத்தடித்து இராணுவ அடக்குமுறையைப் பாவிப்பதுதான், அந்த இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கான ஆதரவைத் தேடித்தான் இங்கு வந்திருக்கிறேன் என்று முடித்தார்.

அறந்தலாவை சம்பவம் அதில் அடங்கிப் போனது. ஆனால் அமிர்தலிங்கத்தின் மனம் திருப்திப்படவில்லை. இப்படியானால் நாம் எங்கே போகின்றோம் என்ற ஆதங்கம் தொடர்ந்தது.

**104. அந்த ஆதங்கத்தை அவர் தமிழ் மக்களோடு அங்கிருக்கும்போது பகிர்ந்தாரா?**

ஆம். பகிர்ந்தார். பிரதிவாதங்களில் வாங்கியும் காட்டினார். அரசியலில் தங்களுக்குக் கிடைத்த லாப நஷ்டங்களையும் அமிர்தலிங்கமும் மங்கையர்கரசியும் உணர்ச்சியுடன் விவரித்தார்கள்.

அந்த சந்திப்பின் பின்னர் வழமைபோல் தமிழ் மக்கள் சிலருடன் கலந்துரையாடி கருத்துக்களைப் பரிமாறினார்கள். அறந்தலாவை சம்பவத்தால் தான் எவ்வளவு கஷ்டப்பட்டார் என்பதை விளக்கினார்.

தமிழ் இளைஞர்களைப் பாதுகாக்கத் தாம் எவ்வளவு தூரம், எவ்வளவு பழிப்புக்களிடையிலும் உதவி செய்தாலும் அவர்கள் உணர்ந்து, இணைந்து, போராட்டத்தின் உரிமைகளுக்குச் சேர்ந்து இயங்குபவர்களாகத் தெரியவில்லை. அவர்களோடு இணக்கமாக இருக்கும் மக்கள்தான் இதை அவர்களுக்கு சொல்லி விளங்கப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அந்த உரையாடலில் ஒருவர் பிரதிவாதமாக 'கூட்டணியினர் இளைஞர்களின் அழிவுக்காக ஜே. ஆரின் திட்டத்துக்கு இணங்கி, பயங்கரவாதச் சட்டத்தை நிறைவேற்ற ஆதரவு தந்துவிட்டு, நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர்' எனக் குற்றம் சுமத்தினார். அதாவது ஜே.ஆருடன் அதை ஏற்படுத்தும் ஒற்றுமை இருந்தது. ஏனெனில் இருவருக்குமே இளைஞர்கள் தலையிடியாக இருந்தார்கள். அந்த நேரத்தில் தமிழரான சிவா பசுபதிதான் அரசாங்கத்தின் சட்டமா அதிபராக (Attorney General) இருந்தார். அவருடன் பேசி அதன் தன்மையைக் குறைத்திருக்கலாம். அப்படியெல்லாம் செய்யாமல் நாடாளுமன்றத்தின் எதிர்ப்பதுபோல பேசிவிட்டு, வாக்கெடுக்கும் நேரத்தில் மட்டும் நாடாளுமன்றத்தை பகிஷ்கரித்து ஒரு நாடகம் மக்களுக்காகப் போட்டீர்கள் என்றார்.

பேச்சுகள் சூடு பிடித்தன.

கூட்டணியினர் ஜே.ஆருடன் பேச்சுவார்த்தை நடத்தியது உண்மைதான். ஆனால் அது அப்படியான ஒற்றுமைக்காக அல்ல. அதை செய்வதால் நிலைமை மோசமாகும் என்று எடுத்துக்காட்டுவதற்கே.

ஒரு பக்கம் ஜே.ஆர்., கூட்டணியே வன்முறையைத் தூண்டுகிறது என்று கூறி, நாடாளுமன்றத்திலும் வெளியேயும் கருத்துக்கள் பரப்பி, இளைஞர்களைக் கட்டுப்படுத்தப் போகிறோமா என்று கேட்கிறார். நாங்கள் கட்டுப்படுத்தாமல் விட்டால் தான் செய்வேன் என்கிறார். இது நாங்கள் கட்டுப்படுத்தக்கூடிய நிலையில் இல்லை. இனப்பிரச்சினைக்கு ஒரு சாதகமான தீர்வை அடைந்தால் மட்டுமே இவை மேற்கொண்டு வளராமல் தடுக்கலாம். இவற்றைப் பேசுவதற்காகவே சந்தித்தோம். ஆனாலோ ஜே.ஆரோ. அதை எல்லாம் புறம்தள்ளி, இந்த இளைஞர்களை ஊக்குவித்தது, வளர்த்தது எல்லாம் கூட்டணியினர்தான், அப்படியில்லை என்பதை நாட்டு மக்கள் நம்பவேண்டும், அதை நிரூபிக்கத் தன்னால் கொண்டுவரும் சட்டத்துக்கு (பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு) ஆதரவு தரும்படியும், ஆதரவு தராவிட்டால் உண்மை நிலையை மக்கள் புரிந்து கொள்வார்கள் என்றும் கூறினார்.

மேலும் கூட்டணி ஆதரித்தாலோ, இல்லையோ தனக்குச் சட்டத்தை ஆக்கிக்கொள்ளத் தேவையான பெரும்பான்மை உண்டு. உங்களைக் கேட்டது நீங்கள் உங்களை சிங்கள மக்களுக்கு நிரூபிப்பதற்கே என்றார்.

நாங்கள் நாடளுமன்றத்தில் அந்தச் சட்டத்தை எதிர்த்துப் பேசினோம். ஆனால் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. – என்று விளக்கினார் அமிர்தலிங்கம்.

அதுதான் வழுவழுத்த அரசியல் என்று வியாக்கியானங்கள் வந்தன.

எங்களுடைய கஷ்டங்களையும் நீங்கள் உணர வேண்டும். நாங்கள் இந்த வன்முறைகளால் கத்தி முனையில் நடப்பதுபோல்தான் நடத்துகொண்டிருக்கிறோம். அறந்தலாவை மாதிரியல்ல. அது இன்னொரு நாட்டுக்கு விளக்குவது. ஆனால் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு அவர்களின் பிடிக்குள் வராமல் இருப்பதற்காக நாங்கள் செய்பவை. பொதுமக்கள் அறியாமல் நாங்கள் அவற்றைச் செய்கிறோம். அவை வெளிப்படையாகத் தெரியாதமையால் நாங்கள் ஏதோ அவர்களை அழிக்க முன் நிற்கிறோம் என நினைக்கின்றீர்கள் என்றார்.

அதற்கு உதாரணமாக பிரபாகரன் உமாமகேஸ்வரன் பிடிபட்ட சம்பவத்தையும் தங்களது ஈடுபாட்டையும் விவரித்தார். அத்தோடு சட்டமாஅதிபர் சிவாபசுபதியின் பங்கு, பணிகளின் மேல் தனக்கோ கூட்டணியினருக்கோ மற்றவர்களுக்கோ எவ்விதமான அதிகாரமும் இல்லை என்றும் விளங்கப்படுத்தினார்.

(வளரும்…)



# கோணமலை காளி ஆச்சி தரிசிப்போம் வாரீர்!

13

- வே.வரதசுந்தரம் -

**அம்பாள் சோறுதருவாள்!**
**வன்செயற் காலத்தே**
**வாலிபரைக் காத்தவள்**
**நீயன்றோ! நீயன்றோ!**
**ஆச்சிநீ காளி!**
**உலாவரும் கோணேசர்**
**உவந்துறையும் கோயில்**
**ஆச்சிநீ காளி!**

'பக்தியுடன் அடியார்கள் தம்காலினால் இடும் பணிகளைக் கூட எங்கள் கோணமலைக் காளியாச்சி தன் தலைமேற்கொண்டு நிறைவுசெய்வாள் என்பது திண்ணம்! திண்ணம்!'

இது திருகோணமலை காளி ஆச்சி பக்தர்களின் துணிவு.

அபீதகுசாம்பிகை அம்பாளை வழிபட்ட குருநம சிவாயர் ஒருகால் பசியால் வாடினார். பசிவந்தால் பத்தும் பறந்து விடும் என்பார்களே! அப்படி அவர் துடிதுடித்துப் போனார். 'மெத்தப் பசிக்குதையா! பாவியென் பாழ்வயிற்றைப் பற்றிஎரிக்குதையா!' என்றலறினார்.

**மின்னும்படி வந்தமேக களத்துஈசருடன்**
**மன்னும் திருமுகத்து வாளியே - பொன்னின்**
**மலையாளே! தாயே! வன்மனத்தே நின்ற**
**மலையாளே! சோறுகொண்டு வா!**

இப்படி அவர் பாட அம்பாள் அருள் செய்தாள். அடியார்கள் பசி கிடக்க எங்கள் காளியாச்சி பார்த் திருக்கமாட்டாள். அமுது படைப்பாள். அவளைப் பிரார்த்தித்து அவளருள் துய்ப்போம். வாரீர்!

திருகோணமலை மண்ணில் விபுலானந்த கழகத்தினை ஸ்தாபித்து தமிழ் சைவப்பணியாற்றி யவரும், தமிழரசுக் கட்சியின் உறுப்பினராக இருந்து தமிழ் மக்கள் உரிமைக்காக சாத்வீகப் போராட்டங் களில் ஈடுபட்டவரும், திருகோணமலை நகராண் மைக்கழக உறுப்பினராக திருகோணமலைக்கும், திருகோணமலை மக்களுக்கும் அளப்பரிய சேவை யாற்றியவருமான எந்தன் நண்பன் இ.சோமசுந்தரம் அவர்கள் சிவபக்தனாக, அம்பாள் பக்தனாக இறுதி மூச்சுவரை வாழ்ந்தவர். காளியாச்சிக்கு நூலெழு தும் முயற்சியில் யான் ஈடுபட்டதும் அன்னார் தன் பெற்றோரும் தானும் அனுபவித்த அற்புதத்தை பக்தியுடன் பகிர்ந்தார். இதோ!:-

'அதுவோ போர்க்காலம். இரண்டாவது மகாயுத் தம் நிகழ்ந்த காலமது. அதிகாலை ஐந்துமணிக்கு நித்திரை கொண்டெழுந்ததும், எனது தந்தையார் தானொரு கனவு கண்டாரெனக் கூறினார். யுத்த முஸ்திபுகள் நடந்துகொண்டிருந்த காலமது என்ப தால் அம்பாளாச்சி தனக்குக் கனவில் கட்டளையிட்ட வாறு ஒழுகவேண்டும் என்று எனது தந்தையார்



பிடிவாதமாக இருந்தார்.

அந்தக் காலத்தில் மக்கள் பொதுவாக உபயோ கித்த வாகனம் மாட்டுவண்டில் ஆகும். ஒருமாட்டு வண்டில் வீட்டுவாயிலில் வந்து நின்றது. எமது தந்தையார் விருப்பப்படி நாமெல்லாம் ஏறியமர்ந் தோம். வண்டியும் மெல்ல மெல்ல நகரத்தொடங்கி திருகோணமலைப் பட்டினத்தைவிட்டு வெளியேறி யது. காட்டுப் பாதையூடாக செல்லும்போது இரு மருங்கினையும் அவதானித்த தந்தையார் 'இதுதான் நான் கனவில் கண்டபாதை', 'இதுதான் நான் கனவில் கண்டபாதை' என்று அடிக்கடி கூறிக் கொண்டே இருந்தார். தந்தையார் கூற்றுக் கேட்டுத் தாயார் வியந்து நின்றார்.

அப்பாதை சென்றடைந்த இடம் பனங்கட்டிமுறிப்பு கிராமம். இதுவே நாமன்று தஞ்சமடைந்த கிராமம். சுற்றுமுற்றும் அவதானித்த தந்தையார் புளகாங்கிதம் அடைந்தார். 'இதுவே நான்கனவிற் கண்ட ஊர்' என்று துள்ளிக் குதித்தார். நாம் பனங்கட்டிமுறிப்பு சென்றடைந்த பதின்மூன்றாம்நாள் திருகோண மலை நகரில் ஜப்பானியர் குண்டுபொழிந்தனர். மக்கள் அல்லோலகலப்பட்டனர். அங்கலாய்த்தனர். இவ்வனுபவத்தை, காளியாச்சி செய்த அவ்வற் புதத்தை, தனக்கும், தனது குடும்பத்தாருக்கும் அம்பாள் சொரிந்த கருணையை தந்தையார் தனது இறுதிநாள்கள் வரைக்கும் நினைவூட்டியமையுடன், எமக்கு கூறிய அறிவுரை: 'கோணமலைக் காளி யம்பாள் காட்டும் வழியே நாம் நடப்பின் அவள் எம்மைக் கைவிடாள்'

பிறிதாரு அனுபவத்தை நண்பர் சோமசுந்தரம் கூறுகின்றார்: 'எனது தாயார் திருமதி இராசலட்சுமி அவர்களின் முதற் பிரசவம் அது. என்னைத் தன் வயிற்றில் சுமந்திருக்கின்றார். அவருடைய தலைப் பிரசவத்தை அருகிருந்து பார்த்துக் கொள்வதாக அவரது தாயார் உறுதியாக இருந்தார். ஆனால் எதிர்பாராத விதமாக அவர் யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய நிலையேற்பட்டது. ஆதலால் உடனே திருகோணமலை திரும்பும் வாய்ப்பு அன்றிருக்க வில்லை.

இந்தச் சூழ்நிலையில், தாயாருக்குப் பிரசவ வேதனை ஏற்பட்டது. யாரும் துணைக்கில்லை. 'காளியாச்சி! காளியாச்சி!' என்று கையறுநிலையில் அம்மா கதறியழுதார். என்ன அதிசயம்! எங்கிருந்தோ ஒருபெண் அங்கேவந்தாள். முன்னர் அறிமுக மில்லாத முகம். அப்பெண் அருகிருந்து மருத்துவம் பார்த்தாள். தாய்சேய் நலம் காத்தாள்.'

வடமராட்சி மண்ணில் நெல்லியடி கிராமத்தைச் சார்ந்தவர் திருமதி புஷ்பவதி சபாநாயகம். அவர் கோணமலைக் காளியாச்சி அற்புதத்தினை நம்முடன் பகிர்ந்துகொள்கின்றார்:-

'1970 தொட்டு 1974 வரை எனது கணவர் சபா நாயகம் திருகோணமலை கல்விப்பணிப்பாளராகக் கடமைபுரிந்தார். அக்காலப் பகுதியில் கோணேசர் கோயில், பத்திரகாளி கோயில் வழிபாட்டில் ஈடுபட்டி ருந்தோம். நாள்கள் செல்லச்செல்ல நாங்கள் காளி யாச்சி பக்தர்களானோம். எனது மகள் திருகோண மலை புனித மரியாள் கல்லூரியில் கல்வி பயின்று கொண்டிருந்தாள். அவருக்கு மூக்கில் பீனிசநோய் ஏற்பட்டது. அதனால் அவர் காலையில் நாள்தோறும் தும்மித் தும்மி கஷ்டப்பட்டார். அத்துடன் காலகஷ்டம் அவருக்கு செங்கமாரிநோயும் ஏற்பட்டது. பதறிப் போய் திருகோணமலை காளிகோயில் தினமும் சென்று மகளின் நோயைத் தீர்க்குமாறு காளியம்பா ளைக் கும்பிட்டுக் கும்பிட்டு வேண்டுதல் செய்தேன்.

அத்துடன் மகளின் பீனிசநோயைக் குணப்படுத்த வைத்திய உதவியை நாடினேன். அக்காலத்தில் விசேட சிகிச்சை நிபுணர்கள் திருகோணமலைக்கு அநுராதபுரத்தில் இருந்துதான் வருவார்கள். காது, மூக்கு, தொண்டை நோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் சதானந்தன் அவர்கள் அநுராதபுரத்தில் இருந்து வாரமொரு தடவை திருகோணமலை வருகைதந்து சிகிச்சையளிப்பார். அக்காலத்தில் அநுராதபுர பிராந் திய சுகாதார அத்தியட்சகராகக் கடமையாற்றிய கலாநிதி வேதாரணியம் எங்கள் குடும்ப சிநேகிதர். அவரது ஏற்பாட்டில் திருகோணமலை அரசினர் மருத்துவமனைக்கு எனது மகளை அழைத்துச் சென்று டாக்டர் சதானந்தம் அவர்களிடம் காட்டினேன்.

மகளை வைத்திய பரிசோதனை செய்த பின் டாக்டர் ஆலோசனைகள் இரண்டை முன்வைத்தார். மகளுக்குச் சத்திரசிகிச்சை செய்யவேண்டும். அவருக் குச் சுவாத்திய மாற்றம் அவசியம். எமக்கோ புண் ணிய பூமியாம் திருகோணமலையை விட்டுச் செல்ல மனமில்லை. அந்த மண் மீதும், மக்கள் மீதும் நமக்கு அப்படியொரு பந்தம். அடுத்தது மக ளுக்குச் சத்திரசிகிச்சை செய்வதை நினைத்தாலே ஒரே பயமாக இருந்தது. இவ்விரண்டு ஆலோசனைக ளையும் என்னால் ஏற்கமுடியவில்லை.

வேறுவழியின்றி பத்திரகாளி அம்பாளிடம் சர ணடைந்தேன். அது பரிபூரண சரணாகதி. மகள்நோய் நீக்குமாறு உருகியுருகி காளி ஆச்சியிடம் வேண்டு தல் செய்தேன். என்ன அதிசயம்! மூன்றேமூன்று மாதங்களில் என்மகள் குணமடைந்தாள். அன்று தொட்டு இன்றுவரை அவள் அந்தநோயை அனுப வித்ததில்லை.

திருகோணமலைப் பத்திரகாளி அம்பாளிடம் நான்வைத்த நேர்த்தி என்ன தெரியுமா? 'காளியாச்சி! திருவிழாக்காலத்தில் நின்திருக்கோயில் வலம்வந்து கற்பூரச்சட்டி எடுப்பேன்.'

(தொடரும்......)



தொகுப்பு:
**மூத்த ஊடகவியலாளர் - குகா**

# சுவிஸ் செங்காலனில் சிறப்புற நடந்த கதிர்வேலாயுதசுவாமி மகா உற்சவம்

ஐரோப்பாவில் பிரசித்தி பெற்ற ஆலயமாக விளங்கும் சுவிற்சர்லாந்து செங்காலன் சென்மார்க்கிறெத்தன் அருள்மிகு ஸ்ரீ கதிர் வேலாயுதசுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந் திருவிழாவில் மகோற்சவம் பக்திபூர்வமாகவும் சிறப் பாகவும் இடம்பெற்றது.









சுவிற்சர்லாந்தில் செயற்பாட்டிலுள்ள சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா கடந்த 22 ஆம் திகதியன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பகல், இரவுத் திருவிழாக்கள் எனத் தொடர்ந்து நடைபெற்று வந்தது.

கடந்த 22 அன்று நண்பகல் 12 மணியளவில் ஆலயபிரதமகுரு சிவாகமரத்தின சிவஸ்ரீ முத்து மீனாட்சிசுந்தரம் முத்துசாமி சிவாச்சாரியார் அவர்கள் அந்தணர்கள் வேதஒலி முழங்கவும், பக்தர்களின் அரோகரா கோஷத்துடனும் கொடியேற்றினார்.

தொடர்ந்து 2ஆம் நாள் சட்கோணத்திருவிழா வும், 3ஆம் நாள் சக்திரூபத்திருவிழாவும், 4ஆம் நாள் குருந்தமரத்திருவிழாவும் தத்ரூபமாக நடைபெற்றன.

5ஆம் நாள் கப்பலில் கதிர்வேலாயுதர் வீதியுலா வந்தார். 6ஆம் நாள் மாம்பழத்திருவிழா சிவன் பார் வதி, பிள்ளையார், பழனியாண்டவர் எனமும் மூர்த்தி களுடன் சிறப்பாக இடம்பெற்றன.

7ஆம் நாள் திருவிழா வேட்டைத்திருவிழா சிறப் பாக நடைபெற்றது. மறுநாள் 8ஆம் நாள் திருவிழா சப்பறத்தில் கதிர்வேலர் உள்வீதி வலம்வந்து காட்சி தந்தார்.

9ஆம் நாள் திருவிழாவான தேர்த்திருவிழா 29 ஆம் திகதி சனிக்கிழமையன்று காலை 10 மணியள வில் கதிர்வேலர் சித்திரத்தேரில் வெளிவீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள்காட்சி வழங்கினார்.

பக்தர்கள் காவடி எடுத்தும், கற்பூரச்சட்டி ஏந்தியும், பிரதட்டை செய்தும், அடி அழித்தும்,பாற்செம்பு ஏந்தி யும் தங்கள் நேர்த்திகளை பூர்த்தி செய்து கொண்டனர்.

சுவிஸிலுள்ள பல்வேறு மாநிலங்களிலிருந்து வந்த பக்தர்கள் கதிர்வேலரின் அருட்காட்சியைத் தரிசித்துப் பிரார்த்தித்து மகிழ்ந்தனர்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிய ளவில் வெளிவீதியில் அமைக்கப்பட்டிருந்த தீர்த்தக் கேணியில் கதிர்வேலர் தீர்த்தமாடி பக்தர்களுக்கு தீர்த்தம் வழங்கினார். பின்னர் ஆலய யாகசாலையில் மஹாபூரணாதி இடம்பெற்று யாககும்பம் வீதிவலம் எடுத்துவரப்பட்டு கதிர்வேலருக்கு அபிஷேகம் செய்யப் பட்டது. மாலை கொடியிறக்கம், ஊஞ்சல் என்பன சிறப்பாக இடம்பெற்றன.

மறுநாள் திங்கட்கிழமை திருக்கல்யாண உற்ச வம் சிறப்பாக இடம்பெற்று மகோற்சவம் இனிதே நிறைவுற்றது.

உற்சவகாலங்களில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பக்தர்கள் பங்குபற்றியமையைக் காணக் கூடியதாக இருந்தது.

ஆலய உற்சவங்களில் கதிர்வேலருக்கு பல்வேறு விதமான அலங்காரம் செய்து அழகுருவாக கதிர் வேலர் வலம் வந்ததை அவதானிக்க முடிந்தது. வேத ஆகம கிரியா பூரணம் கிரியா குமரேசர் அலங்காரச் செம்மல் ஐயப்ப குருசாமி பால. ஜெகநாத பாகாந்தக் குருக்கள் (முரளி ஐயா) கைவண்ணத்தில் கதிர்வே லர் பல்வேறு கோலங்களில் காட்சி தந்தமை சிறப்பம் சமாக அமைந்திருந்தது.

ஆலயபிரதமகுரு சிவாகமரத்தின சிவஸ்ரீ முத்து மீனாட்சிசுந்தரம் முத்துசாமி சிவாச்சாரியார் தலை



மையில் கைலை வேதாகமசீலர் இ.சிவசண்முக நாதக் குருக்கள், வேத ஆகம கிரியா பூரணம் கிரியா குமரேசர் அலங்காரச் செம்மல் ஐயப்ப குருசாமி பால. ஜெகநாத பாகாந்தக்குருக்கள் (முரளி ஐயா), மாவை ஆதீனத்தைச் சேர்ந்த ஜெகதீஸ்வர சர்மா, சூரிச்சைச் சேர்ந்த தியாக புஷ்பானந்த சர்மா (சந்திரன் ஐயா), சிவஸ்ரீ இராம சந்திரகாந்தக்குருக்கள் (ஸ்ரீ சித்தி விநா யகர் ஆலய பிரதமகுரு, Singen Germany) ஆகியோர் சிறப்பாக உற்சவங்களை நடத்தினர்.

சுவிஸ் பிரபல வித்துவான் M.இந்திரன் தலைமை யில் T.சிவகுமார் (நாதஸ்வரம்), S.அருணகிரி (நாதஸ் வரம்), P.காந்தன் (தவில்), R.இளமாறன் (தவில்) ஆகியோர் சிறப்பாக மங்கள இசையை வழங்கி னர்.

ஆலய பரிபாலனசபைத் தலைவர் திரு.வே. கணேசகுமார் தலைமையில் நிர்வாக உறுப்பினர் கள் உற்சவம் சிறப்பாக இடம்பெற தொண்டாற்றி னார்கள்.

மகோற்சவத்தில் தேர்த் திருவிழாவின்போது சுவி ஸில் குனைநசளை ஆல்ப்ஸ் மலையிலமைந்துள்ள சோமாஸ்கந்த ஆச்சிரமத்தைச் சேர்ந்த நாற்றலி, யோவானி ஆகியோர் பங்குபற்றியமை சுவிற்சர்லாந் தில் வாழும் இந்து – சுவிஸ் மக்களின் நல்லுறவை வெளிப்படுத்தியது.

ஆலய மகோற்சவ நிகழ்வுகளை சிவத்தமிழ்க் காவலர், சிவநெறிச் செல்வர், சைவ சித்தாந்த சிரோன் மணி, சைவசித்தாந்த ஜோதி, தமிழ்ச்சுடர் ஆறுமுகம் செந்தில்நாதன் அவர்கள் தூய தமிழில் பக்தர்களுக்கு எடுத்து விளக்கினார்.

ஆலய மகோற்சவத்தை ஒட்டி ஈழத்துக் கவிஞர் இன்பம் அருளையா வரிகளில் சானு இசையில் ‘கதி ர்வேலாயுதா’ என்னும் பாடலும் அத்துடன் சிரவை ஆதீன மாணவிகள் கமலினி கணேசன் ஹேமப் பிரியா ரவீந்திரன் பாடிய ‘வேலன் வாராண்டி கதிர் வேலன் தேரில் வாராண்டி’ பாடலும் வெளியிட்டு வைக்கப்பட்டன.

சுவிஸில் சுகாதார நடைமுறைகள் இறுக்கமாக இருந்தபோதும் எந்தவித இடையூறுகளும் இன்றி ஆலய உற்சவம் சிறப்பாக இனிதே நடைபெற்று முடிவடைந்துள்ளது.

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

**தரம் - 07** | **புவியினதும் விண்வெளியினதும் தன்மை** | **விஞ்ஞானம் அலகு 08**

**01. புவி**

*** கீழுள்ள படத்தை பார்த்து இடைவெளிகளை நிரப்புக.**



1.நாம் வாழும் புவி உள்ளடங்களாக ஞாயிற்றுத் தொகுதியில் 08 கோள்கள் உண்டு.
1)புதன் 2) வெள்ளி 3) புவி
4) செவ்வாய் 5) ................ 6) ................
7) ................ 8) ................

*** கீழுள்ள இடைவெளிகளுக்கு பொருத்தமான சொல்லை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

2.நாம் வாழும் புவியானது ஞாயிற்றுத் தொகுதிக்குரிய கோள்களிடையே சூரியனில் இருந்து ........................ (மூன்றாவது/ ஆறாவது) கோள் ஆகும்.

3.புவி ........................ (வட்ட/கோள) வடிவானது.

4.நாம் வாழும் புவி அண்ணளவாக ................( 4.57 / 2.2 ) பில்லியன் வருடங்களுக்கு முன் தோன்றியது.

*இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள கோள்களில் நாம் வாழும் இவ்வுலகில் மட்டுமே திரவநிலையிலுள்ள நீரும், உயிரினங்களும் உள்ளன.

*புவியில் நீர்வீழ்ச்சிகள், மலைகள், பள்ளத்தாக்குகள், பாறைகள், சமவெளிகள், பாலைவனங்கள், ஆறுகள், குளங்கள் மற்றும் சமுத்திரங்கள் உண்டு.

புவியின் விட்டம் 12,760 Km
மேற்பரப்பளவு 561,740,000 $Km^2$

**02.புவியின் உட்பகுதியின் தன்மை**

➢புவியின் உருவாக்கத்தன்மையில் ஆரம்பத்தில் புவியின் மேற்பரப்பு எரிமலைகளே காணப்பட்டது. பின்னர் அவை குளிர்வடைந்தாலும் புவியின் அதிஉட்புறம் திரவவெப்ப குழம்பாக காணப்பட்டு பல இடங்களில் எரிமலைகளாக காணப்படுகின்றது.

➢எரிமலைகள் வெடித்து புவிமேற்பரப்பிற்கு வரும் போது அவை பாறைகளாக மாற்றமடைகின்றது.

* பொருத்தமான சொற்களை வைத்து பின்வரும் கீறிட்ட இடங்களை நிரப்புக.

1.புவியியலாளர்கள் புவியின் உட்பகுதி பற்றி தகவல்களினை பெரும்பாலும் .................... மூலம் பெறுகின்றனர்.

2.புவியதிர்வின் போது புவியின் உட்புறம் உள்ள பாரிய பாறைகளில் அதிர்வு ஏற்படும். இவ்வதிர்வின் போது .................... அலைகள் தோன்றும்.

3.இப்புவி நடுக்க அலைகளின் அதிர்வுகள் புவியின் .................... ,.................... ஊடாக பயணம் செய்யும்.

4.புவியில் தோன்றும் இப்புவியதிர்வுகளினை தன்னிச்சையாக அளக்க பயன்படும் கருவி .................... ஆகும். இப்புவியதிர்வுமானிகள் புவியின் பல பிரதேசங்களில் உண்டு.

5.புவியதிர்வை அளக்கும் அளவீடு .................... ஆகும்.

6.அதில் .................... வரை இலக்கங்கள் உண்டு.

7.இலங்கையில் கண்டியிலுள்ள .................... பிரதேசத்தில் புவியதிர்வுமானி பொருத்தப்பட்டுள்ளது.

**03.புவியின் உட்பகுதி**

➢புவியின் உட்பகுதி ஒன்றுக்கொன்று வேறுபட்ட பல படைகளாலானது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

➢புவியின் உட்பகுதி மூன்று பிரதேசங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.


➢வெளியிலிருந்து உள்ளாக,





புவியின் குறுக்குவெட்டு முகத் தோற்றம்

1. ................................
2. ................................
3. ................................

➢புவியின் அகக்கட்டமைப்புக்களை அவித்த முட்டை ஒன்றின் குறுக்குவெட்டுடன் ஒப்பிட முடியும்.




➢ கீழுள்ள படத்தினை தெளிவாக அவதானித்து அட்டவணையை பூரணப்படுத்துக.




| முட்டையின் பகுதி | புவியின் பகுதி |
|---|---|
| 4.முட்டையின் மஞ்சட் கரு | .................... |
| 5.................... | புவியின் மென்மூடி |
| 6.முட்டையோடு | .................... |

**அ). புவியோடு**



➢அங்கிகள் வாழும் பகுதி புவியோடு ஆகும்.

➢புவியோட்டில் மலைத்தொடர்கள், சமவெளிகள், சமுத்திரங்கள் போன்றவை உண்டு.

* பொருத்தமான சொற்களை வைத்து கீழுள்ள இடைவெளிகளை நிரப்புக.

7.புவியின் பருமனுடன் ஒப்பிடும் போது .................... பகுதியாகும்

8.இடத்துக்கு இடம் இதன் .................... மாறுபடும்


9.சமுத்திரத்தின் அடியில் .................... உம் .................... பகுதியில் 35km வரை இதன் தடிப்பு வேறுபடும்.

10.புவியோடு .................... , பாறைகளாலும் ஆனது.

11.புவியோட்டில் ஒட்சிசன், .................... , .................... ஆகிய மூலகங்கள் அதிகம் உண்டு.

12.புவியோட்டில் இருந்து கிடைக்கும் பயன்களாவன உலோகங்கள், கட்டிடப் பொருட்கள் , .................... , .................... என்பனவாகும்.

**ஆ). மென்மூடி**




➢ புவியோட்டை அடுத்து உள்ளாக காணப்படும் அமைப்பாகும்.

➢ இதன் தடிப்பு 2,900 km ஆகும்.

➢ திண்ம பாறைகளாலும் திரவ பாறைகளாலும் ஆனது.

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

13.இப்பாறைகள் எம்மூலகங்களால் ஆனது?

....................................................................................

14.மேல் மென்மூடிப்பகுதி எப்பாறைகளாலானது?

....................................................................................

15.கீழ் மென்மூடி அகணிக்கு எல்லையாக காணப்படும். கீழ் மென்மூடிப்பகுதி எப்பாறைகளாலானது?

....................................................................................

16.கீழ் மென்மூடி ஏன் திரவப் பாறைகளாலானது?

....................................................................................

**மேலதிக அறிவிற்கு:**




➢புவியோட்டையும் மேல் மென்மூடியையும் கொண்ட பகுதி கற்கோளம் எனப்படும்.

➢புவியின் மேற்பரப்பில் 71% நீர்நிலைகள் உண்டு. இது நீர்க்கோளம் எனப்படும்.


➢மிகுதி 29% நிலப்பரப்பைக் கொண்டது. இது தரைக்கோளம் எனப்படும்.

➢நிலப்பரப்பு மண், பாறைகள், கனியங்களை கொண்டது.

➢நீர்க்கோளம், தரைக்கோளத்தைச் சூழ்ந்து வளிக்கோளம் பரந்து காணப்படும்.

➢இம் மூன்று கோளத்துடன் இணைந்து அங்கிகளை கொண்ட உயிர்க்கோளம் காணப்படும்.

இ). அகணி






➢புவியின் உள்ளான மையப்பகுதி அகணியாகும்.
➢இதன் தடிப்பு 3,500 km ஆகும்.
➢அகணியானது இரு பகுதிகளை உடையது.

* கீழுள்ள அட்டவணையை நிரப்புக.

| வெளியகணி | உள்ளகணி |
|---|---|
| 17.வெளியான பகுதி<br>18. .................<br>19.4400$^o$c - 5000$^o$c | ..........................<br>திண்மமாக காணப்படும்<br>.......................... |

➢புவியின் உட்புறவெப்பநிலை சூரியனின் மேற்புற வெப்பநிலைக்கு சமனாகக் காணப்படும்.








* கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள உதாரணத்தின் உதவியுடன் ஏனைய இடைவெளிகளை பூரணப்படுத்துக

| புவியின் பகுதி | தடிப்பு | உள்ளடக்கம் | அடங்கியுள்ள மூலகங்கள் | வெப்பநிலை |
|---|---|---|---|---|
| உம் : புவியோடு | 5 - 35 km | பாறைகள், மண் | சிலிக்கன், அலுமினியம் | 0$^o$c - 870$^o$c |
| 20.மேல் மென்மூடி | 650 km | ................. | சிலிக்கன், மக்னீசியம், இரும்பு | 1400$^o$c<br>3000$^o$c |
| 21.கீழ் மென்மூடி | ................. | திரவப்பாறை | ...............,<br>...............,<br>............... | 1400$^o$c<br>3000$^o$c |
| 22.வெளி அகணி | 2200 km | ................. | இரும்பு, நிக்கல் | ................. |
| 23.உள் அகணி | ................ | கடினமான பகுதி | ..............,<br>..............., | ................. |

**04.புவியோடு**
➢புவியானது இரு பிரதான ஓடுகளை கொண்டது.
1.சமுத்திர ஓடு
2.தரை அல்லது கண்ட ஓடு


| சமுத்திர ஓடு | தரை ஓடு / கண்ட ஓடு |
|---|---|
| சமுத்திரங்களின் கீழ் காணப்படும்<br>50 km தடிப்பு<br>சிலிக்கன்,<br>மக்னீசியம் | தரையின் கீழ் காணப்படும்<br>50 km தடிப்பு<br>சிலிக்கன்,<br>அலுமினியம் |



புவியின் பிரதான புவித்தகடுகள்

1. புவியின் மேற்பரப்புப்படை ..................... ஆகும்.
2. ..................... எனப்படும் தகடுகள் மூலம் புவியோடானது பிரிக்கப்பட்டுள்ளது.

**05.புவித்தகட்டின் இயக்கம்**




➢புவியோட்டை உருவாக்கும் புவித்தகடுகள் நிலையாக இருப்பதில்லை. இவை ஒன்றுடன் ஒன்று சார்பாக இயங்கும் தன்மை வாய்ந்தவை.

* மேலுள்ள படங்களை அவதானித்து கீழுள்ள இடைவெளிகளுக்கு பொருத்தமான ஆங்கில எழுத்தினை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

புவியில் உள்ள தகடுகள் ஒன்றுக்கொன்று சார்பாக மூன்று விதத்தில் அசையும்.
1.தகடுகள் ஒன்றிலிருந்து ஒன்று விலத்தி அசைதல். - ...... (A / B / C )
2.ஒரு தகடு மேலும் மற்றைய தகடு கீழ்நோக்கியும் அசைதல். - ...... (A / B / C )
3.ஒரு புவித்தட்டுடன் மற்றைய புவித்தட்டு வழுக்கி அசைதல். - ...... ((A / B / C )

* பொருத்தமான சொற்களை வைத்து கீழுள்ள இடைவெளிகளை நிரப்புக.
4.புவித்தகடுகள் இரண்டும் ஒன்றிலிருந்து ஒன்று விலகும் போது .................. தோன்றும்.
5.புவித்தகடுகள் ஒன்றுடன் ஒன்று மோதி ஒரு தகடு மேலேயும் மற்றைய தகடு கீழ்நோக்கியும் அசையும் போது ................. தோன்றும்.
6. புவித்தகடுகள் ஒன்றுடன் ஒன்று மோதும் போது புவித்தகடுகள் ஒன்று மற்றையதன் மீது வழுக்கி அசையும்.இதன்போது ................. தோன்றும்.
7.புவித்தகடுகள் அசைந்தவண்ணமே காணப்படுகின்றது. இவ்வசைவு மிகவும் மெதுவானது. ஆண்டுக்கு ................. ஆகும்.
8. இவ்வசைவுகள் தகடுகள் ஒன்றுடன் ஒன்று இணையும் ................. எல்லையில் நிகழும்.
9.புவித்தகட்டு எல்லைகள் பெரும்பாலானவை .................. கீழேயே காணப் படுகின்றது.

➢புவியின் மீது புவித்தகட்டு எல்லை காணப்படுகின்றது.
➢இது இரு புவித்தகடுகள் ஒன்றுடன் ஒன்று வழுக்கி அசைவதால் தோன்றியதாகும்.

* கீழுள்ள இடைவெளிகளை நிரப்புக.
10. இது வடஅமெரிக்காவில் அமைந்துள்ளது. இது ................. குறை எனப்படும்
11. இது ................. km நீளமானது.
12. இவ்வெல்லையானது ஒரு புறம் வடஅமெரிக்க புவித்தட்டையும் மறுபுறம் ................. புவித்தட்டையும் கொண்டது.
13.இப்புவித்தகடுகள் ஒன்றுடன் ஒன்று உரோஞ்சுவதால் வருடத்திற்கு ................. வழுக்கி அசையும். அடிக்கடி புவியதிர்வு தோன்றும்.
14.புவித்தகடுகள் மென்மூடியின் கீழே காணப்படும் ................. மிதந்த வண்ணம் இருக்கும்.
15.இத் திரவப்பகுதியில் ஏற்படும் அசைவாலேயே ................. அசையும்.
* விடை எழுதுக.
16.இலங்கையானது எப் புவித்தகட்டில் அமைந்துள்ளது?

..............................................................................

17.இலங்கைக்கு பாரிய புவியதிர்வுகள் ஏற்பட வாய்ப்பின்மைக்கு காரணம் யாது?

..............................................................................

➢புவித்தகடுகளின் அசைவின் விளைவால் உருவாகும் உயிர்ச்சேதத்தை ஏற்படுத்த வல்ல இயற்கை அனர்த்தங்கள்
* புவிநடுக்கம்
* சுனாமி
➢சுமாத்திரத் தீவுகளுக்கு அண்மையிலுள்ள ஒரு புவித்தட்டு மற்றைய தட்டைக் கீழே தள்ளிவிட்டு மேலே சென்றதால் ஏற்பட்ட புவியதிர்வு பாரிய சேதத்தை ஏற்படுத்தி சுனாமி அனர்த்தத்தை ஏற்படுத்தியது.
18.இவ்வனர்த்தம் .................... ம் திகதி .................... ரிச்டர் அளவில் ஏற்பட்டது.

➢2015. 04. 25 இல் நேபாளத்தின் தலைநகரான காத்மண்டை அண்மித்த பிரதேசத்தில் ஏற்பட்ட புவியதிர்வு பாரிய சேதத்தை ஏற்படுத்தியது.
19.இது .................... எல்லையில் நடைபெற்றது.
20.அடிக்கடி புவியதிர்வுக்குள்ளாகும் நாடுகள் ......................... , ......................... ஆகும்.

**'முயற்சிக்கு நீ அடிமை எனில் வெற்றி உனக்கு அடிமை,**
**பணிவுக்கு நீ அடிமை எனில் புகழ் உனக்கு அடிமை.'**

**ஆக்கம் : திலக்ஷனா சிவானந்தன்,**
**கட்டுறு பயில்வு மாணவ ஆசிரியை,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

**வழிகாட்டலும் ஆலோசனையும் : திருமதி ஞானசக்தி கணேசநாதன்,**
**விரிவுரையாளர்,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

**இவ்வினாத்தாளுக்குரிய விடைகள் நாளையதினம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.**

# பேர்ள் கப்பலின் பிளாஸ்ரிக் பொருள்கள் மன்னாரில் கரையொதுங்குகின்றனவாம்

இலங்கை கடற்பரப்பில் அண்மையில் தீப்பற்றிய கப்பலிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆபத்தான பொருள்கள் என சந்தேகிக்கப்படும் சில பொருள்கள் நேற்று(வியாழக்கிழமை) காலை மன்னார் வங்காலை கடற்பரப்பில் கரையொதுங்கியுள்ளன என மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

வங்காலை பொலிஸ் நிலைத்துக்கு அருகிலுள்ள கடற்பரப்பிலேயே சிறிய பிளாஸ்ரிக் உருண்டைகள் என சந்தேகிக்கப்படும் பொருள்கள் கரை ஒதுங்கியுள்ளன என மீனவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த சிறிய உருண்டைகள் கடற்கரையோரங்கள் முழுவதிலும் சித்தரிக் கிடக்கின்றமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளதுடன், குறித்த பகுதிக்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அதிகாரிகள் மற்றும் திணைக்கள அதிகாரிகள் நேரடியாகச் சென்று கரை ஒதுங்கியுள்ள பிளாஸ்ரிக் பொருள்கள் தொடர்பாகப் பார்வையிட்டு வருகின்றனர்.

மேலும் அரிப்பு பகுதியிலும் குறித்த பிளாஸ்ரிக் பொருள்கள் கரை ஒதுங்கியுள்ளன என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தரம் - 08 | காந்தம் | விஞ்ஞானம் அலகு 06

## நேற்றைய வினாக்களுக்கான விடைகள்

1. காந்தத்தினால் கவரப்படும் பொருட்கள் காந்தத் திரவியங்கள் எனப்படும்.
2. நிக்கல், குரோமியம், இரும்பு, கோபால்ற்று.
3. உருக்கு, பெரைற்று
4. உருக்கு, பெரைற்று
5. பெரைற்று
6.


1.சட்டக்காந்தம்   2. U வடிவக் காந்தம்
3.பரிலாடக் காந்தம்   4.குண்டுமுனைக் காந்தம்
5.வட்டக் காந்தம்   6.தட்டைக் காந்தம்
7. உருளைக் காந்தம்

07.

1. காந்தமொன்றில் காந்த விசை அதிகளவில் தொழிற்படும் பகுதி காந்த முனைவு எனப்படும்.
2. 1 – வடமுனைவு (N) 2.தென்முனைவு (S)
3.
1 – திசைகாட்டி மூலம் – திசைகாட்டியின் வடமுனைவு காந்தத்தை நோக்கினால் காந்தமுனைவு தெற்காகும்.
2. சுயாதீனமாக கட்டி தொங்கவிடல்
3.ரெஜிபோமின் மீது வைத்து சுயாதீனமாக நீரில் மிதக்க விடுதல்
} வட முனைவு வடக்கு திசையிலும் தென்முனைவு தெற்கு திசையிலும் ஓய்வடையும்
4.முனைவு தெரிந்த காந்தம் மூலம் – ஒத்த முனைகள் தள்ளும் ஒவ்வாத முனைவுகள் கவரும்.

08.

1.காந்தமொன்றைச் சூழ காந்த விசை தொழிற்படும் பிரதேசம் காந்தப்புலம் எனப்படும்.
2. காந்த விசையைக் குறிக்கப் பயன்படும் கற்பனைக் கோடுகள் காந்த விசைக் கோடுகளாகும்.
3.





09.

1.சீனர்கள்
2.காந்த ஊசி
3.மாலுமிகள், இராணுவ வீரர்கள், விமான ஓட்டிகள்

10.

1.புவியின் வட, தென் முனைவுகளுக்குக் குறுக்கே புவியைச் சூழ புவிக்கு அண்மையில் காணப்படும். பாரிய காந்தப்புலம் புவிக் காந்தம் எனப்படும்.
2.புவியின் உள்ளக அகணியின் அதிக வெப்பம் காரணமாக திரவ நிலைக்குள்ளான உலோக ஓட்டங்கள் புவியின் அச்சுப் பற்றி இயங்குகின்ற போது தோன்றும் மின்னோட்டத்தின் விளைவாக புவிக் காந்தப்புலம் தோன்றுகிறது.
3.




11.

1.தற்காலிக காந்தம், நிலையான காந்தம்.
2.மின்னை வழங்கும் போது மட்டும் காந்தமாகும் ஒழுங்கமைப்பு மின்காந்தம் எனப்படும்.
3.மின்னை வழங்கும் போது மட்டும் காந்த வலிமை காணப்பட்டு, மின் துண்டிக்கப்படும் போது காந்த வலிமை அற்றுப் போவதால்.
4.நீண்டகாலம் காந்த வலிமை காணப்படுவதால்.

12.

1.மென்னிரும்பு
2.காந்தவியல்பு தொடர்ந்து காணப்படாமையால்
3.உருக்கு, பெரைற்று
4.பெரைற்று
5. 1.காலம்/ நாட்படல்
   2.உயர் வெப்பத்திற்குள்ளாதல்
   3.வலிமையான காந்தப் புலங்களினால் பாதிப்படைதல்
   4.அதிர்வுகளுக்கு உட்படுதல்

13.

1. நிலையான காந்தத்தின் காந்தப் புலம் பரவிச் செல்லாதவாறு களஞ்சியப்படுத்தி வைப்பதன் மூலம் காந்தத் தன்மையை நீண்ட காலம் பேணலாம்.
2. நிலையான காந்தங்களில் காந்தப்புலம் பரவிச் செல்லாதவாறு மென்னிரும்பைப் பயன்படுத்தி நீண்டகாலம் களஞ்சியப்படுத்தும் முறை

14. ஒலிபெருக்கி, சிறிய மின்மோட்டார், கதவுப் பிணைச்சல், கைப்பை, விளையாட்டுப் பொருட்கள், திசைகாட்டியின் ஊசி, பென்சில் பெட்டி

**ஆக்கம் - செல்வி ஜெனுஷியா கில்பேட் குணம்**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யா/ செங்குந்த இந்துக் கல்லூரி)**
**யா/தேசிய கல்வியியற் கல்லூரி**
**வழிகாட்டலும் ஆலோசணையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்**
**ஓய்வுநிலை விரிவுரையாளர்**
**யா/தேசிய கல்வியியற்கல்லூரி**

# கொரோனா விடுதியும் யாழ். போதனாவும்




(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் கீழ் கோப்பாய் கல்வியியற் கல்லூரி கொரோனா சிகிச்சை நிலையமாகச் செயற்படும் நிலையில் இங்கே கொரோனா இனம் காணப்பட்டாலும் அறிகுறிகள் தென்படாதோர் சேர்க்கப் படுகிறார்கள்.

இதேநேரம் அறிகுறிகள் தென்படுகின்ற நோயாளர்களும், கொரோனாத் தொற்று ஏற்படும் தொற்றா நோய் உள்ளவர்களும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உள்ள கொரோனா விடுதியாக மாற்றப்பட்ட 2 ஆம், 3 ஆம் விடுதிகளில் சேர்க்கப்படுகின்றனர். இவை இரண்டு விடுதிகளிலும் 70 பேர் மட்டுமே சேர்க்கப்படலாம். ஆனால் தற்போது 72 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். இதனால் மேலும் ஒரு விடுதியின் தேவைப்பாடு உள்ளது என வைத்தியர்களால் கோரிக்கை முன்வைக்கப் பட்டது.

இதற்காக போதனா வைத்தியசாலையின் 24 ஆம் விடுதியே கோரப்பட்டது. ஏனெனில் 24ஆம் விடுதிக்கு போதனா வைத்தியசாலையின் பருத்தித்துறை வீதி வழியாக தனியான போக்குவரத்தை ஏற்படுத்த முடியும். ஒரே தடவையில் 200 நோயாளரை அனுமதிக்க முடியும். அதேநேரம் 24 ஆம் விடுதி ஒரு விபத்து சிகிச்சைப் பிரிவாகும். போதனா வைத்தியசாலையில் தற்போது தனியான விபத்து சிகிச்சை வசதி கொண்ட ஒரு பிரிவும் உண்டு.

இதேநேரம் போதனா வைத்தியசாலையில் தொற்றா நோய் சிகிச்சைப் பிரிவாக தற்போது 8 விடுதிகள் உள்ளன. இந்த 8 விடுதிகளில் ஏற்கனவே இரண்டு விடுதிகள் கொரோனா விடுதியாக மாற்றப்பட்ட நிலையில் 3 ஆவது விடுதியும் கொரோனா விடுதியாக மாற்றப் படுமானால் தொற்றா நோய் விடுதியில் ஏற்படவுள்ள பாரிய நெருக்கடிக்கு என்ன தீர்வு என்பதற்கு உரிய பதில் கிடையாது.

தற்போது ஒரு கொரோனா நோயாளி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அனுமதித்தால் நுழைவு அனுமதி போடப்பட்ட இடத்தில் இருந்து விடுதிக்குச் செல்லும் வரையில் ஒருவர் பின்னால் மருந்து தெளித்துச் செல்கின்றார். இவ்வாறு விடுதியில் அனுமதிக்கப்பட்டவர் இது தொடர்பில் விவரிக்கும்போது மரண நிகழ்வின்போது கிரித்தியம் முடிவுற்று வெளியேறும் சாமுண்டி குருவை அனுப்பும் சம்பவத்தையும், எட்டுச் 8 செலவில் அன்று சந்தியில் படையல் வைக்கச் செல்பவருக்கு சாணி தெளித்து அனுப்புவது போன்றும் ஓர் அச்ச உணர்வாக உள்ளது என்கின்றனர் மக்கள்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் ஒட்சிசன் சிலிண்டர் களஞ்சியத்தில் இருந்து இரு தடவை தனியார் வைத்தியசாலைக்கு சிலிண்டர்கள் எடுத்துச் செல்லப்பட்டதால் அதன் அருகே இருக்கும் வாசல் கதவை நிரந்தரமாக பூட்டுமாறு கூறப்பட்டபோதும் தற்போது பூட்டப்பட்டுள்ளது அவ்வளவு தான்.

இவ்வாறு கூறப்படுபவை தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பதில்ப் பணிப்பாளர் பவானந்தராஜாவைத் தொடர்பு கொண்டு கேட்டபோது –

வைத்தியசாலையில் மேலும் ஒரு கொரோனா விடுதி தேவை என்ற நிலையில் 30 பேர் பங்கு கொண்ட கூட்டத்தில் விவாதித்தே முடிவு எட்டப்பட்டது. 24 ஆம் விடுதியில் சத்திர சிகிச்சைக் கூட வசதி உள்ளதால் அது விபத்து சிகிச்சைப் பிரிவிற்குஅவசியமானதுஎன்பதாலேயே அதனை கொரோனா விடுதியாக மாற்றவில்லை.

ஒட்சிசன் சிலிண்டர் ஓர் உயிர் காப்பு பொருள். அதனை தனியார் கோரிக்கை விடுத்தாலும் வழங்கலாம். ஆனால் அதனை அவர்கள் பணத்துக்கு வாங்க முடியாது. – என்றார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ள கொரோனா நோயாளர்களுக்கு தரமான உணவு வழங்கவேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. கோப்பாய் கல்வியியல் கல்லூரி தொடர்பில் தொடர்ந்தும் முறையிட்டும்தரமற்றஉணவேவழங்கப்படுவதான முறைப்பாடு தொடர்பில் பணிப்பாளரிடம் வினாவியபோது, போதனா வைத்தியசாலை விடுதி நோயாளரின் உணவை வைத்தியசாலை நிர்வாகம் பிறரின் உதவியில் மேற்கொள்கின்றது. ஆனால் கோப்பாய் கல்வியியல் கல்லூரி கொரோனா வைத்தியசாலையின் உணவு விநியோக நிர்வாகம் படையினரின் கீழ் உள்ளது. – என்றார்.

# கஞ்சாவைத் திருடி விற்ற பொலிஸ் முடுக்கிவிடப்பட்டன விசாரணைகள்

யாழ்.மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையம் ஒன்றில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரி ஒருவர் மற்றும் மூன்று பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் இணைந்து கஞ்சா போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டுள்ளனர் என பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு முறைப்பாடு கிடைக்கபெற்றதன் அடிப்படையில் விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

குறித்த பொலிஸ் நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மீட்கப்படும் கஞ்சா போதைப்பொருளை நீதிமன்றில் சமர்ப்பிக்க முன்னர் அவற்றில் இருந்து பகுதியளவில் கஞ்சா போதைப் பொருளை திருடி அவற்றை வெளியில் விற்பனை செய்து வந்தனர் என குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

சான்று பொருளான போதைப் பொருள் திருட்டு மற்றும் திருடிய போதைப் பொருளை விற்பனை செய்தமை ஆகிய குற்றங்களில் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரி ஒருவர் மற்றும் மூன்று பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் ஈடுபட்டனர் எனப் பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டின் பிரகாரம் குறித்த நான்கு பேருக்கும் எதிராக பொலிஸாரின் உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும், குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களின் வாக்கு மூலங்கள் பெறப்பட்டுள்ளன எனவும் அறிய முடிகிறது.

# வவுனியாவில் ஓய்வூதியம் பெறுவோரை வங்கிகளுக்கு அழைத்து சென்ற இராணுவம்






வவுனியா, ஜூன் 11

வவுனியாவில் ஓய்வூதியக் கொடுப்பனவு பெறுவதற்காக இராணுவத்தினரால் முதியவர்கள் வங்கிகளுக்கு அழைத்து வரப்பட்டனர்.

வவுனியா மாவட்டம் உட்பட நாட்டின் பல பாகங்களில் அரசு மற்றும் தனியார் வங்கிகள் ஜூன் 10 மற்றும் 11 திகதிகளில் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. இந்நிலையில் ஓய்வூதியதாரர்களின் அடையாள அட்டைகளை பயணக் கட்டுப்பாட்டில் அனுமதிப் பத்திரமாக உபயோகிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், ஓய்வூதிய கொடுப்பனவு பெறுவோர் தமக்குரிய கொடுப்பனவினை வங்கிகளில் பெறவுள்ள நிலையில் தற்போதுள்ள பயணத்தடையின் காரணமாக ஓய்வூதியக் கொடுப்பனவை பெறுவோர் தமது கொடுப்பனவைப் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டி இருப்பதாகத் தெரிவிக்கப் பட்டதையடுத்து, வன்னி இராணுவ கட்டளைத் தளபதியின் ஏற்பாட்டில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் இராணுவத்தினரால் வாகன ஒழுங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

இதனையடுத்து தற்போதுள்ள கொரோனா இடர் நிலையைக் கருத்திற்கொண்டு முதியோருக்கு ஏற்படும் சிரமங்களை தவிர்க்கும் முகமாகவும் தொற்றுப் பரவலை கட்டுப்படுத்தும் முகமாகவும் வவுனியாவிலுள்ள வங்கிகளுக்கு நேற்று (வியாழக்கிழமை) காலை இ.போ.ச. பஸ்கள், இராணுவ வாகனங்களில் ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெறுவோர் அழைத்து வரப்பட்டனர்.

இதன்போது, சீரான முகக்கவசம் அணியாதவர்களுக்கு இராணுவத்தால் முகக்கவசங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன் இயலாமையால் கஷ்டப்பட்ட முதியவர்களைக் கையைப்பிடித்து இராணுவத்தினர் அழைத்தும் சென்றனர். (100)

# உடனடி மருத்துவ உதவி பெறத் தாமதம் இலங்கையில் அதிகரிக்கும் கோவிட் மரணம்

**சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் இயக்குநர் வேதனை**

உடனடி மருத்துவ உதவியை நாடுவதில் தாமதம் ஏற்பட்டதால் கணிசமான எண்ணிக்கையிலான கோவிட் மரணங்கள் பதிவாகியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் இயக்குநர் வைத்தியர் ரஞ்சித் படுவந்துடவ இவ்வாறு தெரிவித்துள்ளார். ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் பேசிய அவர் –

'அண்மையில் பதிவான உயிரிழப்புகளை ஆய்வு செய்த பின்னர் இதனைக் கவனிக்க முடிந்தது. சுமார் 80 வீதமான கொவிட் நோயாளிகளுக்கு கடுமையான உடல்நலக் குறைவு ஏற்படவில்லை.

எனினும், ஒரு சில நோயாளிகளுக்கு மட்டுமே கடுமையான சிக்கல்களுடன் முடிவடையும் என்று அவர் கூறினார். கடுமையான சிக்கல்களுக்கு உள்ளானவர்களை அடையாளம் காண்பது மிகவும் முக்கியம்.

இல்லையெனில் அத்தகைய நோயாளிகளை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கான வாய்ப்புகள் குறைவாக இருக்கும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, அறிகுறிகளை சிக்கல்களுக்கு இட்டுச்செல்லாமல் யாராவது நோய்த் தொற்று இருப்பதாக உணர்ந்தால் உடனடியாக மருத்துவ உதவியை நாடுமாறு அவர் மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை, கொவிட் பாதிக்கப்பட்டவர்களின் அறிகுறிகளை ஆய்வு செய்யும் போது, 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பொதுவான அறிகுறிகள் எதுவும் இல்லை என்று கண்டறியப்பட்டுள்ளது, சில சமயம் உணவுக் கோளாறுகள் மற்றும் தலைவலி போன்ற அறிகுறிகள் மட்டுமே இருந்தன.

எனவே, யாராவது தனது உடலில் அசாதாரண அறிகுறிகளை உணர்ந்தால் உடனடியாக மருத்துவ உதவியை நாட வேண்டியதன் அவசியத்தை அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

# பொதுச் சுகாதாரப் பரிசோதகரை தாக்கிய இளைஞர் வவுனியா – சாந்தசோலையில் வைத்துக் கைதானார்

வவுனியா, ஜூன் 11

வவுனியா – சாந்தசோலை பகுதியில் பொதுச் சுகாதார பரிசோதகர் ஒருவரை தாக்கினார் எனக் கூறப்படும் சந்தேக நபரைக் வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

முகக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவரை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எச்சரித்தபோது அதனைக் கவனத்திற் கொள்ளாத இளைஞர் பொதுச்சுகாதாரப் பரிசோதகரைத் தாக்கினார் எனப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

25 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகரை தாக்கியுள் ளார் எனத் தெரியவந்துள்ளதுடன், அவரை தற் போது கைது செய்து மேலதிக நடவடிக்கையை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின் றமையுடன் அரச உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவிக்கும் நபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக் கப்படும் எனவும் வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளானார் எனத் தெரிவிக்கப்படும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (100)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் சினோபோர்ம் தடுப்பூசி 3 ஆம் கட்ட நடவடிக்கை நேற்று முன்னெடுப்பு!





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னுரிமையளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்களுக்கான சினோபோர்ம் கொவிட் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் நேற்று மூன்றாம் நாளாகவும் முன்னெடுக்கப்பட்டு இருந்தது.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு 25 ஆயிரம் தடுப்பு ஊசிகள் முதல் கட்டமாக கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றுள் மூன்றாம் நாளாகிய நேற்று வியாழக்கிழமை 1,500 தடுப்பூசிகளை ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டுவரும் நிலையில் மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவிற்குள் தொற்றாளர்கள் அதிகமாக இனங் காணப்பட்டு தனிமைப்படுத் தப்பட்டு விடுவிக்கப்பட்ட பகுதிகளான திருச்செந்தூர், கல்லடி வேலூர் மற்றும் நாவற்குடாப் பகுதிகளில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்பூசிகள் குறித்த பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் ஏற்றப்பட்டது.

கொவிட் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகளை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட கொவிட் தடுப்பு செயலணியின் தலைவருமாகிய கே.கருணாகரன் மட்டக்களப்பு மாவட்ட கொரோனாத்தடுப்புசெயலணியின் இராணுவத் தரப்பு பிரதானி 23 ஆவது படைப்பிரிவின் கொமாண்டர் மேஜர் ஜெனரல் நலின் கொஸ்வத்த, 231 ஆவது படைப்பிரிவின் பிறிகேட் கொமாண்டர் வீ.எம்.என்.எட்டியாராச்சி, மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன் உள்ளிட்ட துறைசார் நிபுணர்கள் மற்றும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

### பயிரின் அடர்த்தியை பரிந்துரைக்கமைவாக பேணுவதால் என்ன நன்மை



விவசாயத்திணைக்களத்தின் சிபாரிசுக்கு அமைவான விதை நெல்பாவனையை மேற்கொள்வதன் மூலம் ஏக்கருக்கு சரியான பயிரடர்த்தியை பேணமுடியும். இதன் மூலம் போதுமான பயிர்களையும் அவற்றிற்கு போதுமான இரசாயன உரத்தினை மாத்திரம் பயன்படுத்த கூடியதாக இருக்கும். அதிக பயிர்கள் இருப்பின் அவை தங்களுக்கு இடையிலான போட்டியில் அதிக போசணை நுகர வேண்டியிருக்கிறது. சரியான பயிர் அடர்த்தியை பேணுவதன் மூலம் அதிக மட்டங்களை பெற்று விளைச்சலையும் பெறலாம். ஒரு ஏக்கருக்கு போதுமான சரியான பயிர் அடர்த்தியை பேண திட்டமிட்ட இயந்திரம் மூலமான நாற்று நடுகை மற்றும் அசோலாப்பாவனையுடனான இயந்திரக்களைக்கட்டுப்பாடு பெரிதும் உதவும். நவீன தொழில் நுட்பங்கள் பல திறவுகோல்கள்களை பல சாதகங்களை விவசாயத்துறைக்கு தந்துள்ளன அவற்றில் ஒன்று தான் இயந்திரம் மூலமான நாற்று நடுகையாகும்.சரியான பயிரிடைவெளி, போதுமான பயிர்அடர்த்தி இயந்திரம் மூலமான களைக்கட்டுப்பாடு, இயற்கையான நைதரசனை தாவரத்துக்கு வழங்கக் கூடிய அசோலா இந்த மூன்று செயற்றிட்டமும் ஒன்றினையும் போது சாதகமான விளைவு மற்றும் உயர் விளைச்சலைப் பெறலாம்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

# மஹிந்தரை சந்திக்கச் சென்ற மஸ்தான் எம்.பிக்கு கொவிட்!

நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்திக்கச் சென்றபோதே அவருக்குக் கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அலரி மாளிகையில் வைத்து நேற்று அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொவிட் தொற்றியமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையில் நேற்றைய தினம் மேலும் 2 ஆயிரத்து 713 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# ஆட்சி மாற்றத்துக்கு ஒன்றிணையுங்கள்!

## எதிர்க்கட்சிகளுக்கு ஹரின் அழைப்பு

**எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து ஆட்சி மாற்றத்துக்கு முயற்சிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ வலியுறுத்தினார்.**

**ஐக்கிய மக்கள் சக்தியினுள் தேவையற்ற பயத்தை உருவாக்கும் தேவை யாருக்கு உள்ளது? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.**



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைப் பதவி இன்னொருவருக்கு செல்லக் கூடும் என்ற பயம் கட்சியினுள் நிலவுகின்றதா என்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ என்பது உறுதியாக இருக்கும்போது, அதனை விசேடமாக உறுதிப்படுத்திக் கொள்ள வாக்கெடுப்பு நடத்தியது முட்டாள்தனமான செயற்பாடு என்றும் ஹரின் சாடினார்.

கட்சியில் கருத்து வேறுபாடுகள் இல்லை என்றும், தான் இரண்டு மாத கால விடுமுறையில் இருப்பதால் அது குறித்து விளக்கமாகக் கூற முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கட்சியினுள் தேவையற்ற பயத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை யாருக்கு ஏற்பட்டது என்பதைத் தேடிப் பார்க்க வேண்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைய மாட்டார்கள் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

எனினும், எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து ஆட்சி மாற்றத்துக்கு முயற்சிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

# திருமண நிகழ்வில் பங்கேற்றவர்கள் தனிமைப்படுத்தல்

பயணத் தடைக் காலத்தில் திருமண மண்டபத்தில் இடம் பெற்ற திருமண நிகழ்வு தொடர்பில் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. திருமண நிகழ்வில் பங்கேற்றவர்களைத் தனிமைப்படுத் தல் சட்டத்தின் கீழ் 14 நாள்கள் தனிமைப்படுத்துமாறும், அவர்களுக்கு பி.சி.ஆர்.சோதனைகளை மேற்கொள்ளுமாறும் நீதிமன்றம் கட்டளை வழங்கியுள்ளது.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பண்டத்தரிப்பு பிரான்பற்றில் சில தினங்களுக்கு முன்னர் திருமண நிகழ்வு நடைபெற்றுள்ளது. வீட்டில் திருமணத்துக்கு அதுவும் வீட்டாருடன் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால், அந்தப் பகுதியிலுள்ள திருமணமண்டபத்தில் உறவினர்களுடன் திருமணம் நடைபெற்றுள்ளது.

இதனையடுத்து திருமண நிகழ்வில் பங்கேற்ற 47 பேர் இதுவரையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அடையாளம் காணப்பட்டவர்களைத் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கமன்று கட்டளை பிறப்பித்துள்ளது.

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 1,057 பேர் கைது

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச் சாட்டில் மேலும் 1,057 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

முகக்கவசம் அணியாமை, சட்ட விரோதமான முறையில் மாகாண எல்லைகளைக் கடந்தமை மற்றும் சமூக இடைவெளி பேணாமை உள்ளிட்ட குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய, கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 27 ஆயிரத்து 977 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

பயணக் கட்டுப்பாடுகள் அமுலில் இருக்கும் காலப்பகுதியில் விதிமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மேலும் 67 பேர் பரிதாபச் சாவு

இலங்கையில் மேலும் 67 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன.

சுகாதார அமைச்சால் புதன் நள்ளிரவு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஒரே தடவையில் உறுதிப்படுத்தப்பட்ட அதிகளவான கொரோனா மரணங்கள் பதிவான சந்தர்ப்பம் இதுவாகும்.

மே 17 முதல் மே 31ஆம் திகதிவரை 19 பேரும், ஜூன் 1 முதல் ஜூன் 08 வரை 48 பேரும் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர்.

43 ஆண்களும், 24 பெண்களுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதன்படி கொரோனாவால் பலியானவர்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 910 ஆக அதிகரித்துள்ளது.

# சிங்கள ராவய அமைப்பின் செயலருக்கும் கொரோனா



சிங்கள ராவய அமைப்பின் பொதுச் செயலாளர் மாகல்கந்தே சுதந்த தேரருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக அவருடைய வாகனச் சாரதிக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இதையடுத்து அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இரத்தினபுரியில் நடைபெற்ற இத்தேகன்த சத்தாதிஸ்ஸ தேரரின் தாயாரின் இறுதிச்சடங்கில் மாகல்கந்தே சுதந்த தேரர் கலந்துகொண்டுள்ளார்.

அதேபோல், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட அமைச்சர்கள் சிலரும் இத்தே கன்த சத்தாதிஸ்ஸ தேரரின் தாயாருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய ‘டெல்டா’ வைரஸ் திரிவுடன் மேலும் ஒருவர் இங்கு அடையாளம்

## உறுதிப்படுத்தினார் மருத்துவர் சந்திம ஜீவந்தர



இந்தியாவில் பரவும் அதிக வீரியம் கொண்ட டெல்டா கொரோனா வைரஸ் திரிவுடன் இலங்கையில் மேலும் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தனிமைப்படுத்தல் நிலையில் இருந்த ஒருவரின் வைரஸ் மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்தியபோதே இவ்விடயம் கண்டறியப்பட்டது.

கொரோனா டெல்டா வைரஸ் வகையால் பாதிக்கப்பட்ட இரண்டாவது இலங்கையர் இவரென்பது குறிப்பிடத்தக்கது.

தனிமைப்படுத்தல் நிலையில் இருந்தவருக்கு பி.1.617 (டெல்டா) வைரஸ் தொற்றியிருப்பதை ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு மற்றும் உயிரியல் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜீவந்தர உறுதிப்படுத்தியுள்ளார்.


# மரண அறிவித்தல்

## திரு. கனகசுந்தரம் ஜெயசிங்

(Medical Nuclear Physicist)

அன்னையின் அரவணைப்பில்
11 - 03 - 1941



ஆண்டவனின் அழைப்பில்
23 - 05 - 2021

மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் இங்கிலாந்தின் பேமின்கம் (Birmingham) நகரை வசிப்பிடமாகவும் யாழ்.இந்துவின் மைந்தனுமாகிய கனகசுந்தரம் ஜெயசிங் (1958 A/L) அவர்கள் 23.05.2021 அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசிரிய தம்பதியரான இராமலிங்கம் கனகசுந்தரம், கனகசுந்தரம் கனகம்மா ஆகியோரின் அன்பு மகனும், வதிரியைச் சேர்ந்த சபாரத்தினம் ரோகினி தம்பதியினரது மருமகனும், ஜெயக்குமாரியின் அன்புக் கணவரும், Dr.சர்மிளா, Dr.நிலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான கனகராசா, கனகசபாபதி (Rtd.Gov.officer) மற்றும் கனகநாயகம், கமலா, விஜய (Rtd.Gov.officer), விமலா (Rtd.vice Principal) ஆகியோரின் அன்புச் சகோதரரும், யூஜின், Dr.ரொம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.05.2021 இன்று அன்னாரது பேமின்கம்மில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று அன்று மாலை 3.00 மணியளவில் அக்கினியில் எரியூட்டப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

கனகநாயகம்- சகோதரன்
(வவுனியா-076 857 0689)
விமலா-சகோதரி
(வவுனியா- 077 074 5532)

தகவல்:
க.விஜய-சகோதரன்
077 764 9120